Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்
கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk (சி-2014)
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 26 (19.01.2004) திங்கட்கிழமை இதழ் :110

# ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினையைத் தீர்க்குமா? விடுதலைப் புலிகளின் திட்டவரைவு குறித்து

# சட்ட நிபுணர்களுடன் சந்திரிகா ஆராய்வு!

(கொழும்பு)

**அண்மையில் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் குறித்து - இந்திய சட்டநிபுணர்கள் உட்பட உயர்மட்டக்குழுவுடன் ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் ஆராய்ந்தார்.**

**இந்தத் தகவலை ஜனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள லேக்ஹவுஸ் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

விடுதலைப் புலிகளின் திட்டவரைபானது ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினையைத் தீர்க்க வழிவகை செய்கின்றதா என்பது தொடர்பாகவே இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு இந்திய உயர்நீதிமன்ற சட்டவல்லுநர் கே.கே.வேணுகோபாலும் சமுகமளித்திருந்தார். இவர் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் செய்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒரு தொகுதி சட்டவல்லுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள மற்றும் கல்வியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பல விடயங்கள் மற்றும் ஐக்கிய இலங்கைக்குள்ளான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை எதிர்கொள்ள சுதந்திரக்கட்சி தயாராம்!

## ரத்தினசிறி விக்கிரமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலை எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக அந்தக் கட்சியின் சார்பாக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்கும் எண்ணம் இல்லை. நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் மரபு, பண்பாடு ரீதியாக ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணிக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும்.

இதன்மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசினைத் தோற்கடிக்க முடியும். சிறிய கருத்து வேறுபாடுகளை மறந்து தேசப்பற்றுள்ள மக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு!

(மண்டைதீவு)

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மாடு ஒன்றுடன் மோதியதில் அதில் பயணம் செய்த முதியவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மண்டைதீவு குளத்தடிப் பகுதியில் இடம்பெற்றது.

மண்டைதீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு குறுக்கே சென்ற மாடு ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஆசீர்வாதம் லாசறஸ் (வயது-72) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இவரது மரணத்துக்குக் காரணம் தலையில் ஏற்பட்ட பலமான காயமே என யாழ். வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கனகம்புளியடிச் சம்பவம்; சடலம் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - கனகம்புளியடிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டிருந்த வர்த்தகரது சடலத்தை அவரது பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான உத்தரவை சாவகச்சேரி நீதிவான் ப.சுப்பிரமணியம் பிறப்பித்தார்.

நேற்று இரண்டாம் நாளாக இடம்பெற்ற மரணவிசாரணைகளையடுத்தே வர்த்தகரான இலங்கைநாதன் சுதாகரனின் சடலத்தை தாய தந்தையரிடம் கையளிக்க நீதிவான் சம்மதம் தெரிவித்தார்.

இலங்கநாதன் சுதாகரனின் மனைவியான சுதாகரன் சுவர்ணவதி மற்றும் மகனான சுதாகரன் வஷ்ணன் ஆகியோரது சடலங்களை அவர்களது உறவினர்கள் நேற்று முன்தினம் கையேற்று அடக்கம் செய்தனர்.

இதேவேளை இதுவரை இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் நாளையும் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

எனினும் சாவகச்சேரிப் பொலிஸாரால் சாட்சியங்கள் ஆஜர்செய்யப்படும் வகையிலேயே விசாரணைகள் தொடரப்பட வேண்டியிருப்பதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (202)

# அமெரிக்க அதிகாரிகள் எவரும் புலித்தேவனை சந்திக்கவில்லை!

## கொழும்பிலுள்ள தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை அமெரிக்க காங்கிரஸைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொழும்பிலிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடியதாக ஊடகங்கள் தெரிவித்த கருத்தை கொழும்பிலிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பெண் பேச்சாளரான கோட் ரெய்லர் தெரிவிக்கையில்,

ஊடகங்கள் வெளியிட்ட இந்தத் தகவல் ஒரு இட்டுக்கட்டிய கதையாகும். அமெரிக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிரடிப்படையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையிலுள்ள இரண்டாயிரம் வெற்றிடங்களை நிரப்பவும், அனைத்து வசதிகளையும் கொண்ட படைப் பிரிவாகப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படைத் தலைமையகத்துக்கு - பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றபின் முதன் முறையாக விஜயம் செய்த இந்திர டி சில்வாவுக்கு அங்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர், அங்கு பேசியபோதே பொலிஸ்மா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்; முன்மொழிவுகள் அடுத்த மாத இறுதியில்!

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த முன்மொழிவுகள் எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் மேற்கொள்ளப்படும்.

இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது நடைபெற்றுவருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் தெரிவித்தார்.

இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இரண்டு நாடுகளுக்கிடையில் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.கடல்பாதுகாப்பு, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் ஏனையபாதுகாப்பு உடன்பாடுகள் உட்பட பல விடயங்கள் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது.(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி ஏற்பட்ட பின்னர் அனைத்து தேர்தலிலும் போட்டி என்கிறார் மைத்திரிபால

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் - எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய அனைத்துத் தேர்தல்களிலும் இந்தக் கூட்டணி போட்டியிடும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

புதிதாக அமைக்கப்படும் கூட்டணி முதன் முதலாக வடமேல் மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ளும். இந்தக் கூட்டணி இனிவரும் காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிடும்.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. உடன்பாடு ஏற்பட்டதும் இதற்கு ஆதரவாக இரு கட்சிகளும் இணைந்து ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளன எனத் தெரிவித்தார்.

## கூட்டணி உடன்படிக்கைத் திகதி; ஜே.வி.பி. தான் தீர்மானித்தது என்கிறார் டி.எம்.ஜெயரட்ண!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்பாடு நாளை கைச்சாத்திடப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இது கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பாக ஜே.வி.பிதான் திகதியை நிர்ணயித்துள்ளது. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா இந்தக் கூட்டணி தொடர்பாக இதுவரை எதுவித திகதியையும் நிர்ணயிக்கவில்லை.

ஜே.வி.பியுடன் சுந்திரக் கட்சி கூட்டணி ஏற்படுத்தவுள்ளது என்பது உண்மை. ஆனால், இரு கட்சிகளுக்கும் இடையில் உடன்படிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
இருக்கைகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## இலண்டன் வாழ் இந்துக்களின் உதவியுடன்

# யாழ் போதனா வைத்தியசாலைக்கு இரத்தம் சுத்திகரிப்பு இயந்திரம்

யாழ்போதனா வைத்தியசாலையில் சிறுநீரக சிகிச்சைப்பிரிவுக்கு நவீன இரத்தம் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் வைபவம் இன்று யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுமுகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இலண்டன் வாழ் இந்துக்களின் அன்பளிப்பாக 17 லட்சம் பெறுமதியான இந்த இயந்திரம் வழங்கும் வைபவத்தில் ஆசியுரையினை நல்லை திருஞான சம்மந்த ஆதின ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்மந்த பராமாச்சாரியார் சுவாமிகள் வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக கலாநிதி க.சிவமலர் வைத்திய கலாநிதி த. பேரானந்தராசா, வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம் அதிபர் க.சிவாஜி வைத்திய கலாநிதி ச.குகதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தோர்



குருநகர் நாட்டுக்கூத்துத் கலைஞர் ஆர்.ஜி. கிறிஸ்தோப்பர் சமீபத்தில் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணித் தலைவரும் யாகப்பர் ஆலய பங்குச்சபை பொருளாளரும், நடன நல்லிசை மன்றச் செயளாளரும், குருநகர் நெய்தல் வளர்பிறை நாடக மன்றம் மற்றும் நாட்டுக்கூத்து அமைப்பு ஆகியவற்றின் காப்பாளருமாகச் செயற்பட்டுவருகிறார். இவர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய பழையமாணவரும்ஆவர். (206)



ஓய்வு பெற்ற பிரதி சுங்க அத்தியட்சகர் இராமலிங்கம் சுந்தரமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் கொழும்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.சிறீஸ்கந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சரவணையைச் சேர்ந்த அமரர் இராமலிங்கம் விசாலாட்சி தம்பதிகளின் ஏக புதல்வனும், யாழ். வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவார். தற்போது வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவராக விளங்கும் சுந்தரமூர்த்தி, நீண்டகாலமாக இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்.



சரவணை மேற்கு வேலணையைச் சேர்ந்தவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஓய்வுபெற்ற முதலாம் தர வரி உத்தியோகத்தருமான சுப்பிரமணியம் சோமசேகரம் கடந்த வெள்ளிக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யாழ்ப்பாணம் தாரணி அச்சக உரிமையாளராக இருந்து தமிழமுது எனும் காலாண்டு இலக்கிய இதழை மணிசேகரன் எனும் புனைபெயரில் வெளியிட்டு வந்தார். இவர் சரவணை பாரதி சனசமூக நிலைய ஸ்தாபகர்களுள் ஒருவர் என்பதுடன் ஓய்வுபெற்ற பின்னர் பத்திரிகைகள்பலவற்றில் பணியாற்றிவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் வேலணை மத்தியமகாவித்தியாலய் பழைய மாணவராவார்.



கல்வயல், சாவகச்சேரியைப்பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கால்நடை போதனாசிரியர் ஆர்.வீ.கந்தசாமி அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ்.நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தென்மராட்சி ஓய்வூதியர் சங்க ஆயுட்கால உறுப்பினரும், உலக சைவப்பேரவை (இலங்கைக்கிளை) யின் ஆயுட்கால அங்கத்தவரும், நல்லூர் பஜனைக் குழுவின் உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் ஆயுட்கால அங்கத்தவரும், யாழ். ப.நோ.கூ.சங்க பொதுச்சபை மற்றும் உபசபை உறுப்பினரும், யாழ்.உயர் நீதிமன்றில் யூரராகவும் கடமையாற்றியுள்ளார்.

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோருக்கு 37 வயது உத்தராட நட்சத்திரம் மகரராசி, லக்கினத்தில் செவ்வாய், 12 கிரகபாவமுள்ள விவாகரத்துப்பெற்ற படித்த ஒரே மகனுக்கு, பொருத்தமான நற்பண்புள்ள 34 வயதிற்குட்பட்ட படித்த மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு, படம், குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: பொ.இராமலிங்கம், ஆலங்குளாய் வீதி, சண்டிலிப்பாய் வடக்கு. T.P.0777-554168. (597)

### விற்பனைக்கு

16", 14", 12, 10" தச்சு வேலை செய்யும் சீனா மெசின்கள், டிசைன் சீவும் ரஷட்டர்கள், சான் பேப்பர், கிறைண்டர்கள், எலெக்றிக் றில்லர்கள், அங்கிள் கட்டிங் மெசின், வளைவு வெட்டும் ஜிக்சோ, தூசு அடிக்கும் வூலோவர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன், 20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2159)

### விற்பனைக்கு

**TATA - 450** சிவப்பு நிற **CANDER 15000 Km** ஓடிய நிலையில் இல. 011 - **W P-HK.2797** பினான்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-265/1\2 புளுமண்டல் வீதி, கொழும்பு - 13
T.P:- 011 2385530
0777 - 666704 (593)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல் அஜீத், கார்த்திக், ரோஜா நடித்த

**உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**TOMP RAIDER II** (சி-2004)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

**ஜெய்**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2005)

**வெளிவந்துவிட்டது!**

2004 ஆம் ஆண்டு
புதிய பாடத்திட்டம்
தமிழ் மொழியும் இலக்கியமும்
செயல் நூல்
தரம் 6
ஆக்கம்: பண்டிதர் திரு.சிவநடராசா



**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம்.** (585)

எமது பயிற்சியகம்
19 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# கலாலயா

பயிற்சியகம்
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- 3 மாத கால கேக் ஐசிங், உணவுகள் தயாரித்தல், பூவேலை, கைவேலை, Fabric Painting, கூந்தல் அலங்காரம் பயிற்சிகள் . இத்துடன் இக்காலப்பகுதியில் பிரபல அழகுக்கலை நிபுணர் ஒருவரால் 3 நாள்களுக்கு Facial அழகுக்கலை, முக அழகு சிகிச்சை, தலைமுடி அலங்கரிப்பு, மணப்பெண் அலங்காரம் என்பன மிகக்குறைந்த கட்டணத்தில் பயிற்றுவிக்கப்படும்.
- 6 மாத கால உடை தயாரித்தல் பயிற்சி

**சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 25-01-2004 (ஞாயிறு)**
**கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம் 26-01-2004 (திங்கள்)**

- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.30 மணிவரை அறிந்துகொள்ளலாம். இயக்குநர்.
(சி-2158)

## யாழ்.போதனா வைத்தியசாலை சிறுநீர் சிகிச்சைப் பிரிவுக்கு நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் (HAEMODIALYSIS MACHINE) வழங்கும் வைபவம்

இலண்டன் வாழ் இந்துக்களின் அன்பளிப்பாக ரூபா 17, 000,00 (ரூபா பதினேழு இலட்சம்) பெறுமதியான மேற்படி இயந்திரம் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு திருமுருகன் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைய இலண்டன் வாழ் திரு.வே.சிவசுந்தரம் என்ற அன்பர் ஊடாக இவ் இயந்திரம் பெறப்பட்டுள்ளது.

இவ் இயந்திரம் வழங்கல் வைபவம் யாழ்.போதனா வைத்தியசாலை சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் 19.01.2004 மாலை 4 மணிக்கு நிகழ உள்ளது.

| | |
|---|---|
| தலைவர்: | வைத்திய கலாநிதி.எஸ்.சதுர்முகம் (பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை) |
| ஆசியுரை: | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்) |
| பிரதம விருந்தினர்: | சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பளை) |

*சிறப்பு விருந்தினர்கள்:*

கலாநிதி க.சிவபாலன் :
(பீடாதிபதி யாழ்.மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி த.பேரானந்தராசா:
(வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம்:
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திரு.க.சிவாஜி:
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

வைத்திய கலாநிதி ச.குகதாசன்:
(கண் வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

நிறைவுரை செஞ்சொற்செல்வர் திரு.ஆறு திருமுருகன்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

இரத்த சுத்திகரிப்பு பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை. Haemodialysis Division
(598)

Serendib Express
Feel The Difference...

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பும் இடம் மாற்ற அறிவிப்பும்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைத்திங்கள் 5 ஆம் நாள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்
உங்கள் தேவையை எங்கள் சேவையாக வழங்குகின்ற

# சேரண்டிப் ஏயர் லைன்ஸ்
# SERENDIB AIR LINES

என்ற ஸ்தாபனம் இல. 86 ,பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் மங்களகரமாக ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ஆகவே அத்தருணம் எமது முகவர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், வாடிக்கையாளர்கள் அனைவரும் சமூகம் தந்து விழாவைச்சிறப்பித்து எமக்கு ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- எமது ஸ்தாபனம் இதுவரை நாளும் இல 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இனிமேல் விமானப்பயண ஒழுங்குகளுக்கு எமது புதிய இடமான இல 86, பருத்தித்துறை வீதி முகவரிக்கே விஜயம் செய்யுங்கள்.

உங்கள் சௌகரிகமான சுகமான விமானப்பயணங்களுக்கு உடனடியாக நாடவேண்டிய இடம் சேரண்டிப் ஸ்தாபனமே.

**தலைமை அலுவலகம்: SERENDIB LINES** (சி-2161)

**86, POINT PEDRO ROAD, JAFFNA.** T.P: 021 2226242, FAX: 2225600

**Note:** ஆரியகுளம் சந்திக்கும் வேம்படி மகளிர் கல்லூரிச் சந்திக்கும் இடையில்.

# குண்டுத்தாக்குதல்களை நடத்தும்படி பிரபாகரனிடம் பிரதமர் கேட்டுள்ளாராம்!

## அமைப்பாளர்களின் கூட்டத்தில் சந்திரிகா பேச்சு



(கொழும்பு)

**நாட்டின் பல்வேறு நகரங்களிலும் குண்டுவெடிப்புத் தாக்குதல்களை நடத்தும்படி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடித மூலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்தி ஒன்றை அனுப்பியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.**

**தென்மாகாணத்திலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களைக் கடந்த 13 ஆம் திகதி சந்தித்த போதே, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.**



அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் - பிரபாகரனுக்கு பிரதமர் அனுப்பிய செய்தியில், நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நகரங்களிலும் குண்டுகளை வெடிக்கச்செய்யும்படி கோரியிருந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத்தக்க வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அடிமட்டத்திலிருந்து மீள ஒழுங்குபடுத்துமாறும் கேட்டுக்கொண்டதுடன் - கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நாட்டின் பாதுகாப்புக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இப்போது ஜே.வி.பி.ஒரு அரசியல் கட்சியாக ஜனநாயக ரீதியில் நடந்துகொள்கிறது. கடந்த காலத்தில் ஐ.தே.கட்சி - சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைக் கொன்றுகுவித்ததைப் போன்று இக்கட்சி மீண்டும் கொலைகளைச் செய்யமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் வழங்குமுடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 54 சீன மீனவர்கள் கடற்படையால் கைது!

கிழக்குக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்துக்கொண்டிருந்த 54 சீன மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர்.

கடந்த புதன்கிழமை வாகரைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர். மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட நெறிமுறைகளை இவர்கள் மீறியதாகக் கூறிய கடற்படையினர்- அவர்களின் இரண்டு ட்ரோலர்களையும், 54 மீனவர்களையும் கைது செய்து சீனன்குடா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## பறவைகளை வேட்டையாடிய 6 பேர் கைதாகினர்!

பின்னவல வனவிலங்கு சரணாலயத்தில் பறவைகள் சிலவற்றை வேட்டையாடியதற்காக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் பேருவளை பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்றது. பேருவளை நகரசபை தலைவர், ஐ.தே.க உறுப்பினர் உட்பட 6 பேர் கைது செய்யபபட்டுள்ளனர். இவர்கள் பின்னவல வனவிலங்கு பிரதேசத்திற்குள் சென்ற பறவைகளை வேட்டையாடினர். இவர்களால் பிடிக்கப்பட்ட சில அரிய பறவைகள் வனவிலங்கு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## சுதந்திரக்கட்சி கூட்டணிக்குப் பின்னர் யுத்தம் ஏற்படும் என்பதில் உண்மையில்லை

### ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மக்கள் விடுதலை முன்னணி கூட்டணியை ஏற்படுத்திக் கொள்வதனால், நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும் என்ற கருத்தில் எந்தவித உண்மையுமில்லை.

இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சந்திரசேகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி ஏற்பட்டதும், இந்தக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையுடனேயே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பதையும் அவர் மறுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனை எதையும் விதிக்கும் நிலைப்பாடு தம்மிடம் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு அரசாங்கங்களுடன் பேச்சு நடத்திய விடுதலைப் புலிகளுக்கு - அந்த இரு அரசாங்கங்களும் நிரந்தரமானதாக இல்லாத நிலையில் பேச்சில் திருப்தி என்பது ஏற்படவில்லை.

இந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிகளுக்கிடையிலான கூட்டணி, விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சு நடத்தி தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நிரந்தர அரசாங்கத்தை கொண்டிருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

(01)

## மார்ச் மாத மூன்றாவது வாரத்தில் நாடாளுமன்றத்துக்கான தேர்தல்!

### சிங்களப் பத்திரிகை தகவல்

அரசியலமைப்பின் மூலமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி - எதிர்வரும் 25ம் திகதி நள்ளிரவு அல்லது அதற்கு அண்மையாகவுள்ள ஒரு நாளில், தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கவிருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.வி.பியுடனான கூட்டணி உடன்பாடு எட்டப்பட்டதும் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாகக் கூறும் திவயின, தனது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான நியமனப் பத்திரங்கள், பெப்ரவரி முதல் வாரத்தில் தாக்கல் செய்யப்பட்டதும், மார்ச் மூன்றாவது வாரத்தில் தேர்தல் நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

புதிய நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடர் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் கூட்டப்படவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் மூலம் புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படும் வரை தற்போதைய அரசாங்கத்தை காபந்து அரசாகச் செயற்படும்படி ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக்கொள்ளலாம் என்றும்,

அல்லது முழு அமைச்சுக்களின் பொறுப்பையும் ஜனாதிபதி தானே எடுத்துக்கொண்டு தேர்தலை நடத்துவதற்கும், அரசியலமைப்பில் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

பெரும்பாலும் முழு அமைச்சுக்களின் அதிகாரங்களையும் தானே பொறுப்பேற்றுக்கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா பொதுத்தேர்தலை நடத்துவதற்கே வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவும் திவயின மேலும் தெரிவித்துள்ளது.

## 18 வருடகாலப் போரில்

# கஜபா றெஜிமென்டைச் சேர்ந்த 2795 படையினர் உயிரிழப்பு!

### தலைமையக அதிகாரி உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

இலங்கை இராணுவத்தின் கஜபா றெஜிமென்டைச் சேர்ந்த 2795 படையினர் இதுவரைகாலமும் யுத்தத்தில் கொல்லப்பட்டிருப்பதாக - அனுராதபுரம், சாலியாபுரவிலுள்ள கஜபா றெஜிமென்ட் தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் சிந்தக பெரேரா தெரிவித்தார்.

போரில் உயிரிழந்த கஜபா றெஜிமென்ட் படையினர் குறித்த விபரங்களைப் பதிவுசெய்யும் அதிகாரியான சிந்தக பெரேரா மேலும் தெரிவித்ததாவது -

1983 மே 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நடத்த மோதலில் - கஜபா றெஜிமென்ட் முதலாவது உயிரிழப்பைச் சந்தித்தது. முதலாவது கஜபா பற்றாலியனைச் சேர்ந்த கோப்ரல் கே.எம்.எல். ஜெயவர்த்தனவே உயிரிழந்த முதலாவது இராணுவத்தினராவார்.

2001 டிசெம்பர் 17 ஆம் திகதி திருகோணமலை, மிகுந்தபுரவில் கோப்ரல் சந்திரகுமார இறுதியாக உயிரிழந்தார். 1983 இற்கும் 2001 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 2795 கஜபா றெஜிமென்டைச் சேர்ந்த படையினர் உயிரிழந்துள்ளனர்.

அராலித்துறைக் குண்டுவெடிப்பில் 1992 ஆம் ஆண்டு உயிரிழந்த மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னவே இந்தப் படைப்பிரிவில் கொல்லப்பட்ட உயர் அதிகாரியாவார்.

போரில் உயிரிழந்த கஜபா றெஜிமென்டைச் சேர்ந்த படையினர் நினைவாக சாலியபுரவிலுள்ள தலைமையகத்தில் 54 அடி உயரமான நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2000 ஒக்ரோபர் 19 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இந்த நினைவுச் சின்னத்தில் உயிரிழந்த 2795 படையினரின் விபரங்களும் பொறிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான முயற்சிக்கு ஆதரவு தேடி 10 இலட்சம் பேரைத்திரட்டிப் பேரணி!

### கொழும்பில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு

சமாதான முயற்சிகளுக்கு பொதுமக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவை வெளிக்காட்டும் வகையில் பத்து இலட்சம் மக்களைத் திரட்டி கொழும்பு நகரில் பாரிய பேரணி ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக, காணிஅமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இந்த மாபெரும் பேரணி கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு, ஆதரவு வழங்கும் 'ஜனசிலுமின' என்ற கூட்டடத்தில் கலந்துகொண்டு பேசியபோதே, அமைச்சர் ராஜித சேனாரத்னா இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தற்போதைய சமாதான சூழ்நிலையில் ஏதேனும் குழப்பம் ஏற்படுமானால், அதற்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி சந்திரிகாவே ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## நீர்வழங்கலை மட்டுப்படுத்துவதற்கு வடிகாலமைப்புச்சபை தீர்மானம்!

தற்போது நிகழும் வரட்சியான காலநிலை காரணமாக -நாடுமுழுவதும் கடுமையான முறையில் நீர் வழங்கலை மட்டுப்படுத்தவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் தினங்களிலிலிருந்து நாள் ஒன்றிற்கு சில மணி நேரங்கள் நீர் விநியோகத்தினை மட்டுப்படுத்தவுள்ளதாக, நீர்வழங்கல் வடிகால் சபையின் பதில் தலைவர் ஏ.எம்.மெத்தானந்த தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக, பாவனையாளர்களின் நீர்த்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான நீரைப் பெற்றுக்கொள்ளும் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துவருவகின்றது. நாளொன்றுக்கு இரண்டு அங்குலம் வீதம் இந்த ஆண்டு நீர்மட்டம் குறைந்துவருவதாகவும்- விசேடமாக கிழக்குப் பகுதிக்கு மழை கிடைத்தாலும், எதிர்பார்க்கும் மழைவீழ்ச்சி மத்திய மலைநாட்டில் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது.

இந்தவருடம் வரட்சி ஏற்பட்டுள்ளமைக்கு, சென்ற வருட இறுதியில் மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைந்ததே காரணம்.

இதன்காரணமாக நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு, தேசிய நீர்வழங்கல் அமைப்பு மக்களிடம் கேட்டுள்ளது.

## தலைமன்னார் தேவாலயத்தில் வழிபாட்டுக்கு கடற்படை தடை

(மன்னார்)

தலைமன்னார் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாடுகள் செய்வதற்கு கடற்படையினர் தடையாக உள்ளதாக தலைமன்னார் பங்குத்தந்தை வணபிதா லலிமா தெரிவித்தார்.

இந்தத் தேவாலயத்தில் கிறிஸ்தவ மக்கள் வழிபாடு செய்யமுடியாத சூழ்நிலை, ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்ற பின்னரே ஏற்பட்டது எனவும், கிறிஸ்தவ தேவாலய எல்லைக்குள் சில தினங்களுக்கு முன்னர் புதிய கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டு, முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பல உயர்மட்ட அதிகாரிகளுக்கு முறையிட இருப்பதாகவும் இவ்விடயம் தொடர்பாக மன்னார் ஆயருக்கு தெரியப்படுத்தி உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ்நெற் இணையத்துக்கு போட்டியாக 'சிங்கள நெற்'

'தமிழ்நெற்' இணையத்தளத்தைப் பிரசாரரீதியில் தோற்கடிக்கும் நோக்கில் - 'சிங்கள நெற்' என்ற பெயரில் இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சிங்களவர்களை முன்னிலைப்படுத்தும் சர்வதேச மத்திய நிலையம் என்ற சிங்கள அடிப்படைவாத அமைப்பு ஒன்றே, இந்த இணையத்தளத்தை ஆரம்பித்திருப்பதாக அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிங்கள மக்கள் இந்த இணையத்தளத்தில் அன்றாடம் செய்திகளைப் பார்வையிடமுடியும் என்றும் - இதன்மூலம் சர்வதேச ரீதியாக தமிழ்நெற் இணையத்தளத்தின் செல்வாக்கை வலுவிழக்கச்செய்யமுடியும் என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# 19 ஓட்டங்களினால் இந்தியா அவுஸ்ரேலியாவை வென்றது



பிறிஸ்பேர்னில் நேற்று நடந்த பரபரப்பான ஆட்டத்தில், அவுஸ்ரேலிய அணியை 19 ஓட்டங்களால் இந்தியா தோற்கடித்தது.

அவுஸ்ரேலியா - இந்தியா - சிமபாப்வே அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் போட்டித்தொடரில், இந்திய அவுஸ்ரேலிய அணிகள் இரண்டாவது தடவையாக நேற்று மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் கங்கூலி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கும் ஷேவாக், காயம் காரணமாக அணியில் இடம்பெறாததால் சச்சின் டெண்டுல்கருடன், கங்கூலி தொடக்க ஆட்டக்காரராக களம்புகுந்தார்.

கங்கூலி ஆரம்பத்திலேயே அடித்து ஆடத்தொடங்கினார். 2 பவுண்டறி, 1 சிக்ஸருடன் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கங்கூலி, வில்லியம் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்த வி.வி.எஸ்.லக்ஸ்மன் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார். டெண்டுல்கர் 86 ஓட்டங்களைப்பெற்றிருந்தபோது சைமன் வீசிய பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட் விழுந்தபோது இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 147.

மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்தவர் ராவிட். இவர்கள் இருவரும் மிகச்சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தனர். இந்த மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டம் 133 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 280 ஆக இருந்தபோது 64 பந்துகளில் 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட், ஹார்வியின் பந்துவீச்சில் வில்லியம்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் யுவராஜ்சிங் 5 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் பிரட்லீயீன் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார்.

50 ஆவது ஓவர்கள் முடிவில் கவாஸ்கரின் மகனான றொஷான் கவாஸ்கர் 2 ஓட்டங்களுடனும் லக்ஸ்மன் 103 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



இறுதியில் இந்தியா 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 50 ஆவது ஓவர் நிறைவில் 303 ஓட்டங்களைப்பெற்றது.

அவுஸ்ரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திர பந்து வீச்சாளர்களான பிரட்லீ, மற்றும் கிலஸ்பியின் பந்து வீச்சுக்கள் இந்திய துடுப்பாட்ட வீரர்களால் துவம்சம் செய்யப்பட்டது.

பிரட்லீ 10 ஓவர்கள் பந்துவீசி 83 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு விக்கெட்டையும், ஹார்வி 10 ஓவர்கள் பந்துவீசி 61 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், சைமன்ஸ் 8 ஓவர்கள் பந்துவீசி 47 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு விக்கெட்டையும், வில்லியம்ஸ் 8 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். கிலெஸ்பி 10 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களைக் கொடுத்தும் விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை.

அதனைத் தொடர்ந்து 304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் அவுஸ்ரேலியா துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கில்கிறிஸ்டும், ஹெய்டனும் அதிரடியாக விளையாடி இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளை விளாசித் தள்ளினர். ஓட்ட எண்ணிக்கை 46 ஆக இருக்கும்போது கில்கிறிஸ்ட் பதான் பந்தில் பாலாஜியிடம் பிடிகாடுத்து ஆட்டமிழந்தார். அவர் 15 பந்தில் 21 ஓட்டங்கள் எடுத்தார்.

இரண்டாவது விக்கெட்டிற்கு ஹெய்டனுடன் ரிக்கி பொண்டிங் ஜோடி சேர்ந்தார்.

அவர் 07 ஓட்டங்களுடன் பாலாஜி பந்தில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து மார்ட்டின் ஆட வந்தார். அவர் ஒரு ஓட்டத்துடன், பாலாஜியின் பந்தில் யுவராஜ் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் ஹெய்டன் அதிரடியாக விளையாடி அரைச்சதம் அடித்தார்.

4 ஆவது விக்கெட் ஜோடியாக சைமன்ட்ஸ் களமிறங்கினார். 20 ஓட்டங்கள் எடுத்த நிலையில் களமிறங்கிய றொஷான், கவாஸ்கர் பந்தில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து ஹெய்டனுடன் கிளார்க் ஜோடி சேர்ந்தார்.

சிறப்பாக விளையாடி ஹெய்டன் சதம் அடித்தார். அவர் 109 ஓட்டங்களில் பதான் பந்தில் ஆட்டமிழந்தார். அதனைத்தொடர்ந்து பெவன் களமிறங்கினார். கிளார்க் 42 ஓட்டங்களில் பதான் பந்தில் ஆட்டமிழந்தார்.

7 ஆவது விக்கெட்டிற்கு பெவனுடன் கார்வி ஜோடி சேர்ந்தார். கார்வி 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நெஹ்ரா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய பிரெட்லி , கிலஸ்பி தலா 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பாலாஜி பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். கடைசி விக்கட்டுக்கு பெவனுடன் ஜோடி சேர்ந்த வில்லியம்ஸ் ஓட்டங்கள் ஏதும் எடுக்காத நலையில் ஆட்டமிழந்தார். பெவன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அவுஸ்திரேலியா 284 ஓட்டங்களுக்கு சல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால், இந்தியா 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## இந்திய வீரரான லக்ஷ்மனின் திருமணம் 15 ஆம் திகதி

(இந்தியா)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான எஸ்.லக்ஷ்மனுக்கு திருமணம் நடைபெற இருப்பதாக இவரது தாயார் டொக்ரர் சத்யபாமா தெரிவித்தார்.

எதிர்வரும் மாசி மாதம் 15 ஆம் திகதி லக்ஷ்மனுக்கு ஹைதராபாத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது. லக்ஷ்மனின் மணப்பெண் யார் என்ற விபரத்தை அவரது குடும்பத்தினர் ரகசியமாக வைத்துள்ளனர். எவ்வாறாயினும் லக்ஷ்மன் மணக்க இருக்கும் பெண், உறவுமுறையாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

இதனால், லக்ஷ்மன் எதிர்வரும் 12 ஆம் திகதி அவுஸ்ரேலியாவில் இருந்து ஹைதரபாத் திரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தில் சிறப்பாக ஆடிய லக்ஷ்மன் நிம்பஸ் நிறுவனத்துடன் ரூபா 5 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

தென்னாபிரிக்காவிற்கெதிரான நான்காவது டெஸ்ட்டில்

## பலோ ஒன்னைத் தவிர்ப்பதற்காக போராடும் மேற்கிந்திய தீவுகள் அணி



தென்னாபிரிக்க - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் போட்டியில்- மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களை எடுத்தநிலையில் பலோ ஒன்னைத் தவிர்ப்பதற்கு 191 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் கடுமையாகப் போராடிவருகின்றது.

முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா- ஆறு விக்கெட்டுக்களை இழந்து 604 ஓட்டங்களை எடுத்தநிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் அணித்தலைவர் ஸ்மித் 139, கிப்ஸ் 192 ஓட்டங்களையும் கலிஸ் ஆட்டமிழக்காமல் 130 ஓட்டங்களையும் எடுத்தது சிறப்பம்சமாகும். இதில் கலிஸ் இதுவரை நடந்த தொடரில் 700 ஓட்டங்களுக்கு மேல் பெற்று அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் அண்மையில் இந்தியாவிற்கு எதிராக டெஸ்டில் பெற்ற கூடுதல் ஓட்டங்களை முறியடித்தார்.

பந்து வீச்சில் டிலான், எட்வேட்ஸ், கொலிமோர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சர்வான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி - 5 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களையே பெற்றுள்ளது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல் மட்டுமே அதிகூடிய ஓட்டங்களாக 77 ஐப் பெற்றார்.

பந்து வீச்சில் நிற்னி 3 விக்கெட்டுக்களையும், நெல், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தமிழகத்தில்

# காளையை அடக்க முயன்ற மூவர் பலி; 400 பேர் காயம்!



மதுரை அருகே அலங்காநல்லூரில் நடந்த ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டி 2 பேரும், திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே லிங்கப்பட்டியில் ஒருவரும் இறந்தனர். 400 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக தென் மாவட்டங்களில் ஜல்லிக் கட்டு நிகழ்ச்சிகள் நேற்று மாலை நடைபெற்றன.

300 இற்கும் மேற்பட்ட காளைகள் இதில் கலந்து கொண்டன. ஆயிரக்கணக்கானோர் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைக் காண கூடியிருந்தனர். 150 க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் - சிறப்புமேடையில் இருந்தபடி ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்தனர்.

மயிர்க்கூச்செறியும் வகையில் பல காளைகள் சீறிப்பாய, உயிரைச் துச்சமென மதித்த இளைஞர்கள்கூட்டம் பாய்ந்து சென்று காளைகளை பிடிக்க முயற்சித்தனர். இதில் பல இளைஞர்களுக்கு காயமேற்பட்டது. காளைகள் முட்டியதில் 2 பேர் உயிரிழந்தனர். 200 இற்கும் மேற்பட்டோர் காயடைந்தனர்.

காளைகளை அடக்கிஅதன் கழுத்தில் கொம்புக்களில் கட்டப்பட்டிருந்த பட்டுத்துணிகளை அவிழ்த்த வீர இளைஞர்களுக்கு பரிசாகத் தங்கக் காசுகள், வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன

இதேபோல், திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே கலிங்கப்பட்டிஎன்ற கிராமத்திலும் ஜல்லிக் கட்டு நடந்தது. இதில் செல்வராஜன் என்ற கூலித் தொழிலாளி காளை முட்டி பலியானார்.

சிவகங்கை மாவட்டம் சிறாவயல் கிராமத்தில் நடந்த ஜல்லிக்கட்டில் 100 பேர் காயமடைந்தனர். மொத்தத்தில் பல்வேறு பகுதிகளில் நடந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் 400 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# மீண்டும் வாஜ்பாயே ஆட்சியைப் பிடிப்பார்

## ஜோதிடர்கள் கணிப்பு

(டெல்லி)

ஒரிசா மாநிலம் பூரியில் சர்வதேச ஜோதிடர்கள் மாநாடு நடந்தது. ஒருவாரம் நடந்த இந்த மாநாட்டில் இந்தியாவின் முன்னணி ஜோதிடர்கள் 24 பேர் கலந்துகொண்டனர்.

அமெரிக்கா பிரான்ஸ் அவுஸ்திரேலியா, டென்மார்க், நேபாளம் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற ஜோதிடர்கள் 35 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் ஜோதிட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர்.

மாநாட்டின் இறுதி நாளன்று உலகத் தலைவர்களின் ஆட்சி பற்றி ஜோதிடர்கள் அலசி ஆராய்ந்தனர். அப்போது பிரதமர் வாஜ்பாய் ஜாதகமும் கணித்துப் பார்க்கப்பட்டது.

வாஜ்பாய் ஜாதகப்படி அவருக்கு மகாராஜ யோகம் நீடிப்பதால் அவர் மீண்டும் ஆட்சியைப் பிடித்து பிரதமர் பதவியை ஏற்பார் என்று ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

இந்தியாவில் அவர் அமைதியையும் நல்ல வளத்தையும் ஏற்படுத்துவார் என்று ஜாதகபலன்படி உள்ளதாக வாஜ்பாயின் ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

சோனியாகாந்தி ஜாதகப் பலன்களும் நல்ல விதமாகத்தான் உள்ளன என்றாலும் வாஜ்பாய் ஜாதக அமைப்புப்படி அவருக்கு சோனியாவைவிட கூடுதல் நட்சத்திரங்களின் அனுக்கிரகங்கள் இருப்பதால் அவரால் தான் ஆட்சியை பிடிக்க முடியும் என்ற முடிவுக்கு ஜோதிடர்கள் வந்துள்ளனர்.

இந்த ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றத்துக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஜோர்ஜ் புஷ் முடிவு செய்துள்ளார். ஆனால் அவர் கடும் சவால்களைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்று ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

இந்த ஆண்டு சீனாவில் உள்நாட்டு கலவரம் அதிகரிக்கும் என்று ஜோதிடர்கள் மாநாட்டில் கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# சமாதானத்தை விரும்பும் தேசியமாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம்

## குட்டிசிறி மோட்டார் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் தெரிவிப்பு

சமாதானத்தை விரும்பும் ஒரு தேசியமாக நாம் வாழ்வதையே விரும புகிறோம். ஆனால், தென்னிலங்கையில் உறுதியான சமாதானத்தை எடுத்துச்செல்லும் நிலைமையில் எந்தவொரு அரசியற்கட்சிகளும் இல்லை. அவர்கள் சமாதானத்தை வழுவழுத்த நிலையிலேயே வைத்திருக்கிறார்கள் என - குட்டிசிறி மோட்டார் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் லெப்.கேணல் அமுதன் தெரிவித்தார்.

கேணல் கிட்டு நினைவாக - தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களின், சிறந்த அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி பொது மைதானத்தில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் - இளவாலை யங் ஹென்றீஸ் அணியினர் சாம்பியனாகினர். முல்லைத்தீவு விக்கினேஸ்வரா அணியுடனான இறுதியாட்டத்தில் 1:0 என்ற கோல் அடிப்படையில் யாழ்ப்பாண ஹென்றீஸ் அணி சாம்பியனாகியது.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப்புலிகள் எவரிடமும் தோற்பதை விரும்புவதில்லை. ஆனால் நாம் தோற்க விரும்புவது எமது மக்களுடன் மட்டும் தான். இரு அணியினரும் நன்றாக விளையாடினீர்கள் ஆனால் ஒரு அணியினருக்கு மட்டுமே வெற்றி பெறும் வாய்ப்புக் கிட்டியது. ரசிகர்களாகிய நாங்கள் சிறப்பான, பண்பான, நேர்மையான ஆட்டத்தையே உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

உங்களுடைய தவறுகள் எங்களைப புண்படுத்தும். நீங்கள் விசிலுக்கு கட்டுப்பட்டு ஆடவேண்டும். மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். தலைமைக்கு கட்டுப்படும் பண்பை பெற்றுக் கொள்ளவேண்டும். இதன் மூலமே நீங்கள் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக தலை நிமிர்ந்து நடக்க முடியும். உங்கள் மூலம் எமது தேசம் கௌரவம் பெறும்.

இன்று உலகில் உதைபந்தாட்டத்தின் மூலம் மிகப்பெரும் கௌரவத்தைப் பெற்றவர் பீலே. எவ்வளவு பணம் வழங்க, உலகின் மிகப்பெரும் கழகங்கள் முன்வந்தபோதும், தனது தாய்நாட்டுக்காக ஆடுவதற்கு மட்டுமே அவர் தயாராக இருந்தார். தாய நாட்டை நேசிக்கும் பண்பை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் வியர்வை சிந்திய இந்த மண்ணில் போராளிகளின் குருதியும் சிந்தப்பட்டதென்பதை நீங்கள் மறக்கக் கூடாதெனவும் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக - தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வே.இளங்குமரன், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம், குட்டி சிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு, உயரம் பாய்தல் சாதனையாளர் கலாநிதி எதிர்வீரசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



முஸ்லிம் வட்டார மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்தவும், கல்விசார் முன்னெடுப்புக்கான பங்களிப்பை ஏற்படுத்தவும் என கியூடெக் உயிர்ப்பூட்டல் சமாதானக் குழுவினர் ஒஸ்மானியா கல்லூரி சுற்றாடலில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.



**உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் நாவலர் விழா - அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.**

**இந்த நிகழ்வில் கலந்துகொண்ட உடுவில் பகுதி இந்துக் குருமார்களான பிரம்ம ஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள், சு.முத்துச்சாமிக்குருக்கள், வா.பாலசுப்பிரமணிய குருக்கள், கா.குகானந்தக்குருக்கள் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து, வாழ்த்துப்பத்திரம் வழங்கப்பட்டது.**

**மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் கலாநிதி சி.ஸ்ரீ சற்குணராஜா, கலாநிதி மா.வேதநாதன், பொ.அனுரா ஆகியோரும் அருகில் உள்ளனர். (101)**

## மருதங்கேணியில் 1300 பேருக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு

மருதங்கேணி உதவி அராசங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மேலும் 1300 பேருக்கு, 25 ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் - கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தப் பிரதேசத்தின் கிராம அலுவலர் பிரிவுகளில் கொடுப்பனவு பெறுபவர்களிடம் கையொப்பங்களைப் பெற்றுச்சென்றனர். இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே மீளக்குடியேறியுள்ள மக்களில் - 50 வீதமானவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (122)

### பெயர்பலகை கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டது

அளவெட்டி சிறிசுப்பிரமணிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார பெயர்ப்பலகை - நேற்று முன்தினம் திறந்து வைப்பதற்கான ஆயத்தம் செய்த போது, அது விஷமிகளினால் அகற்றப்பட்டு, மறுநாள் மல்லாகம் வயல்வெளிக் கிணற்றுக்குள் இருந்து, விவசாயி ஒருவரால் மீட்கப்பட்டது.

கலாசாரத்தை வளர்ப் பதற்கு அளவையூர் மக்கள் பாடுபடுகின்ற போதிலும், இப்படியான சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் வருத்தத்துக்குரிய விடயமென பலரும் தெரிவித்தனர். (72)

### நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து ஆறு பேருக்கு இடமாற்றம்

(அரியாலை)

நல்லூர் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் 6 பேருக்கு - திடீர் இடமாற்ற அறிவிப்பு வந்துள்ளது. இதன் - கீழ் ஏ.மகாலிங்கம், பு.தஜீதரன் ஆகியோர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கும், என்.நவரத்தினராசா உடுவில் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் எம்.மகேந்திரன், என்.சர்வகுணசீலன் ஆகியோர் உள்ளக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

மேற்படி கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றத்திற்கான காரணங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. (55)

### புலமைப்பரிசில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(அரியாலை)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டின் கீழுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் 11 மாணவர்களுக்கு - இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரியர் குகதாசன் மற்றும் அவர் பாரியார் ஆகியோர் கலந்துகொண்டனர். மேற்படி 11 மாணவர்களுக்கும் இலவச புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும், அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. (55)

# விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற சர்வதேச சமூகத்தின் நிலை மாறிவருகிறது!

## மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என சர்வதேச சமூகத்தினரால் கருதப்பட்டநிலை தற்போது மாற்றமடைந்துவருகிறது. இவ்வாறு தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வின் மூன்றாம் ஆண்டு நிறைவு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நினைவுகூரப்படுதல் என்பது சம்பிரதாயபூர்வமாக மாறிவருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலை வேட்கை, விடுதலைப் போராட்டம் என பதற்கு திருப்புமுனையாக அமைந்து சர்வதேச உலகுக்கு தமிழர்களின் நிலைப்பாட்டைத் தெரியப்படுத்திய பொங்குதமிழ் நிகழ்வு, இங்கு நினைவுகூரப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்மக்கள் அகிம்சைப் போராட்டம் ஆயினும், ஆயுதப் போராட்டம் ஆயினும் இணைந்து நின்ற தன்மையைக் காணலாம். பொங்குதமிழ் நிகழ்விலும் அவர்களின் ஒத்துழைப்பு பலமாயிருந்தது.

மக்கள் எப்போதுமே சுயநலமாயிருந்து கொள்வார்கள், முக்கியமான தருணத்தில் முக்கியமான ஒன்றுக்காக குரல் எழுப்புவதற்காக பொதுவான நலன்களை எப்பொழுதுமே கொண்டிருப்பார்கள். தமிழர்கள் ஒவ்வொருவரினதும் மனங்களிலும் ஆழமாகப் பதிந்துள்ள உணர்வின் வெளிப்பாடு இதுவாகும்.

பயங்கரவாத நடவடிக்கை என்ற பெயரில் இடம்பெற்றுவந்ததாக சர்வதேச சமூகத்திற்கு கூறப்பட்டு வந்த தமிழீழ போராட்ட வரலாறு நீண்ட பரிணாமத்தைக் கொண்டிருந்தது.

சுமைகளைச் சுமந்து, களைத்து பல்வேறு அர்ப்பணிப்புக்களை செய்து கொண்டபின்னர் - சர்வதேசம் எமது போராட்டத்தை நன்குணர்ந்துள்ளது.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில் உருவேற்றிக் கொள்ளும் ஒரு நிகழ்வாக இந்த நிகழ்வு கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களில் குழப்பவாதிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும் சர்வதேச சமூகம் இதுவரை கருதிவந்தது. தேசியத்தலைவரின் சரியான வழிகாட்டல் இந்தக் கருத்தினை மாற்றியமைத்துள்ளது.

யுத்தமாயினும் சரி, சமாதானமாயினும் சரி, சரியான வகையிலும் சரி, முழுமையான வகையிலும் அர்ப்பணிப்புச் செய்யவேண்டும் என்ற தலைவரின் வழிகாட்டல்கள் காரணமாகவே, தற்போதும் நாம் சமாதான நடவடிக்கையில் முழுமையாக எம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம்.

குழப்பமான தளம்பல் நிலைகளிலும், நம்பிக்கையோடு தொடர்ந்தும் நாம் சமாதானப் பாதையில் செல்கிறோம்.

சிங்கள ஆளும்வர்க்கம் தமிழர்களை காலங்காலமாக பகடைக் காய்களாகவே பயன்படுத்தி வந்தது. சமாதானமா, யுத்தமா இரண்டிலொன்றுதான் என்று சிங்கள அதிகார முடியில் இருந்தவர்களின் கருத்து ஒரு காலப்பகுதியில் நிலவியிருந்தது.

வல்லமையில்லாத மக்களாக இருந்த தமிழினம் - வல்லமை பெற்றிருக்கும் இந்த வேளையில் எவ்வளவுதான் விருப்பம் இருந்தாலும், யுத்தத்திற்கு வரமுடியாமலும், எவ்வளவுதான் விருப்பம் இல்லாவிட்டாலும் சமாதானத்திற்கு வரவேண்டியவர்களாகவும் தற்போது சிங்கள இனம் உள்ளது.

இந்த நிலையில், சுதந்திரத்தை அடையும்வரை மக்களின் ஒத்துழைப்பு ஒலிக்கவேண்டும். தமிழினத்தின் பொறுப்புவாய்ந்தவர்கள் பொங்குதமிழ் நிகழ்வுகளைப் போன்று பல்வேறு நிகழ்வுகளை மக்களிடையே நடத்தி இந்த உணர்வுகளைப் பரப்பவேண்டும்.

தற்போது கிடைத்துள்ளது நிரந்தர சமாதானம் அல்ல. ஒரு தற்காலிக அமைதியே. போராட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கு நாம் தயாராகவே உள்ளோம் எனத் தெரிவித்தார்.

## கிராம மட்டத்தில் பயிற்சி முடித்த தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

மூவிமொண்டோ நிறுவனத்தின் அனுசரணையுடனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியியுடனும் நடத்தப்பட்ட சுகாதார மேம்பாட்டுத்திட்டத்தில் - கிராம மட்டத்தில் நடைபெற்ற பயிற்சிகளை முடித்துக்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பயிற்சியை முடித்து வெளியேறிய 100 தொண்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இத்தாலிய நாட்டினைச் சேர்ந்த கெல்வி தனியலா பிராண்டி சான்றிதழ்களை வழங்கிக்கௌரவித்தார்.

## செபஸ்தியான் தேவாலய நவநாள் கொண்டாட்டம்

குருநகர் அர்ச்.செபஸ்ரியன் தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தினமும் மாலை 5.15 மணிக்கு ஆராதனைகள் தொடங்கி - பிரசங்கம், திருப்பலி, சொரூப ஆசீர்வாதம் என்பன நிகழும். இன்று மாலை 5.30 மணிக்கு நற்பிரசாத ஆராதனை, அந்துப்பிரகாரம் ஆகியன நடைபெறும்.

நாளை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி இடம்பெற்று, முடிவில் சொரூப ஆசீர்வாதத்துடன் கொண்டாட்டங்கள் நிறைவுபெறும். (206)

### புதிய நிர்வாகிகள் தெரிவு

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

தலைவராக இளைப்பாறிய அதிபர் கோ. சிவசுந்தரம், இணைச் செயலாளர்களாக எஸ்.சோம லிங்கம், எஸ். உருத்திரேஸ்வரன் ஆகியோரும், பொருளாளராக வி.மதனன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (55)

### சைவ மகாநாடு

(உடுவில்)

சைவ பரிபாலன சபையின் சைவ மகாநாடு - எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மிகக் கோலாகலமானமுறையில் நடைபெறவுள்ள இந்த மகாநாட்டில் - கடந்த நவம்பர்மாதம் நடைபெற்ற சமயபாடப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

இந்தமுறை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார, வவுனியா ஆகிய இடங்களில் இருந்து சுமார் 80 ஆயிரம் மாணவர்கள் பரீட்சை எழுதியுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் மாணவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படவிருப்பதாக சைவ பரிபாலன சபைத் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.. (101)

### அப்துல் மஜீத் பாதுகாப்பு கோருகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரான ஏ.எல்.அப்துல் மஜீத் தனது வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டுள்ளார்.

ஆயுதக் குழுக்களிடம் இருந்து, தனது குடும்பத்தினருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்திருப்பதாலேயே சாய்ந்தமருதிலுள்ள தனது வீட்டுக்குப் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அப்துல் மஜீத் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடந்த திங்கட் கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.




சிறுகதை

# சூடாதமலர்(கள்)

பூ.நகுலன்

காலையில் அவள் எழுந்து தன்னுடைய கடமைகளை முடித்த பின்னர், அன்று வெள்ளிக்கிழமையாதலால் வீட்டில் நின்றிருந்த பூமரங்களிலுள்ள பூக்களை ஒவ்வொன்றாகப் பறித்து, பூக்கூடைக்குள் போட்டுக்கொண்டிருந்தாள்.

வெள்ளிக்கிழமைகளில் அவள் தலைக்கு முழுகுவது உண்டு. அவளுடைய கருமையான கூந்தலை விரித்த வண்ணம் அது உலர்வதற்கு என விட்டிருந்தாள். அது பார்ப்பதற்கு தோகை மயில் ஒன்று தன்னுடைய தோகையை விரித்தபடி நின்றதுபோல இருந்தது. கருமையான கூந்த லில் இருந்து தலைமுழுகியதன் காரணத்தால், வடிந்து கொண்டிருந்த நீர்த்துளிகளைப் பார்ப்பதற்கோ கருமுகிலில் இருந்து மழைபெய்துகொண்டிருந்த காட்சிபோல இருந்தது.

அவளுடைய கைகள் பூக்களை அழகாகக் கொய்த வண்ணம் இருந்தன. எத்தனை வகையான பூக்கள் உலகி லுள்ளன. தன்னுடைய வாசத்தால் உலகை மயக்குகின்ற பூக்கள்; வாசமே இல்லாது இருக்கின்ற பூக்கள்; சிறிய பூக்கள்; பெரிய பூக்கள்; பயனின்றி பூமரங்களில் பூத்து வாடிவிடுகின்ற பூக்கள்; காயாகாமல், கனியாகாமல் வாடி விடுகின்ற பூக்கள்; அப்பப்பா! பூக்களில்தான் எத்தனை வகை. இப்படியாக அவளது மனம் பூக்களைப் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அதேநேரம் அவளது கைகளால் பறிக்கப்படுகின்ற பூக்களுக்கு இருந்த உணர்வும் பல்வேறுபட்ட தன்மையாக இருந்திருக்கலாம். ஒன்று - வீணேவாடி உதிராமல், இவளால் பறிக்கப்பட்டுப் பயனடைய இருக்கின்றோமே என்பதாக இருந்தது. மற்ற யைது - தன்னுடைய செடிகள் என்ற உறவிலிருந்து தன் னைப் பறித்து மாலை என்ற பெயரால் இன்னொருவர் கைக்கு மாறி, தகுந்தவரிடம் போனால் பூஜிக்கப்பட்டும், அர்ச்சிக்கப்பட்டும் இருப்பதோடு, தகுந்தவரிடம் போகாது விட்டால் வாடி வதங்கி உருக்குலைந்து போவதற்கும் ஆளாகி விடுவோமோ என்கின்ற எண்ணங்களை உடைய னவாய் அந்தப் பூக்கள் காணப்பட்டன.

இப்படியாக எவ்வளவு நேரந்தான் நிக்கவிடுவது. இப்படிப் பூக்களைப் பறித்து அவற்றை மாலையாகத் தொடுத்து, ஆண்டவனின் சந்நிதியில் அவற்றைச் சேர்த்து, ஆண்டவ னின் பூசையின்போது தன்னுடைய மாலை எந்தச் சாமிக்குப் போடப்படுகின்றது - வெளிவீதி வரும் சாமிக்குப் போடப்பட் டிருக்கின்றதா அல்லது மூலஸ்தான மூர்த்திக்கு போடப்பட் டிருக்கின்றதா என்ற ஆராய்ச்சியில் அவள் இன்னும் எவ்வளவு காலம்தான் வாழ்ந்துகொண்டிருப்பது. இவ்வா றான எண்ணங்கள் அவளைப் பெற்றவர்களிடத்தே எப்போ தும் தோன்றிய வண்ணமே இருக்கின்றன.

அவளைப் பெற்றவர்கள்தான் என்ன செய்வார்கள். அவள பருவமடைந்தபோது அவர்கள் தமது சொந்த ஊரிலே வசித்து வந்தார்கள். அதனால் தம்முடைய பெண்ணினது அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வைக் கொண்டாடியவிதம் அந்தவூரிலுள்ள அனைவருக்கும் அது ஒரு அதிசயமான சம்பவம். அந்தவூரிலுள்ள அனைவருமே அக்கொண் டாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் மனதில் அழியாத படமாக அது என்றைக்குமே உள்ளது. எல்லோ ருமே ஆச்சரியப்படத்தக்கவகையில், அந்தவூரில் திருவிழா போன்று ஒரு மாதமாக நடந்த அந்தப் பூப்புனித நீராட்டு விழாவை, இன்றைக்கும் அவ்தவூரிலுள்ள யாரைக் கோட்டா லும் கூறுவார்கள்.

அந்த ஒரு நிகழ்ச்சிதான் அவளின் வீட்டில் நடந்த இறுதி மங்கலகரமான பெரு நிகழ்ச்சியாக கடந்த 15 வருடங்களுக்கு இருந்து வருகின் றது. இந்தப் 15 வருடங்களுக்குள் அவளுள் எத் தனை மாற்றம். அவளது ஊரில் தான் எத்தனை மாற்றம் ஏற்பட்டு விட்டது. அவளது ஊரில் இப்



கொள்வதற்கு ஒருவரும் இல்லை. அவளது ஊர் தமிழர், சிங்களவர் என்ற இன முரண்பாடு காரணமாக சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றாக இருக்கின்றது. இராணுவத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஊர்க்ள் யாவும் ஒருங்கமைக்கப்பட்டது தான் உயர்பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்டு வருகின்றது.

அவள் இப்போதிருக்கும் இடத்திற்கு வந்தது 5 வருடங் களுக்கு உள்ளாகத்தானிருக்கும். இடையிலுள்ள வருடங் கள்யாவும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, இடம் பெயர்வும் அகதி வாழ்க்கையும் என அலைந்துகொண்டி ருந்த காலம் அது. அந்தக் காலங்களில் அவளுடைய தம்பி ஒருவன் போராளியாகப் போய்விட்ட நிகழ்ச்சியும் நடந்தது.

பருவமடைந்தபோதே ஒரு பெண்ணானவள் திருமணத் திற்கு ஆயத்தமாகி விடுகின்றாள் என்பதுதான் அர்த்தம் என, உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவள் பருவ டைந்த பின்னர் ஏற்பட்ட இவ்வாறான இடம்பெயர்வு -அகதி வாழ்க்கைகளுக்கு இடையே பெண்ணின் திருமணம் பற்றி யோசிப்பதா, நாட்டு நிலைமை பற்றி சிந்திப்பதா என்கின்ற கவலைகளுக்கு இடையே இவர்களுடைய பெற்றோர் அன் றாடம் தமது உணவு, அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றி வந்தனர்.

இவர்களுடைய வாழ்வு இவ்வாறு ஓடிக்கொண்டிருக்க, காலமும் தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது. இவர்கள் குடும்பத்தில் பிறந்த ஒருவன் தனது படிப்பை விட்டு விட்டு, வேலை செய்யத்தொடங்கினான். முதலில் அதில் ஒருவருக்கும் விருப்பம் இல்லைத்தான். ஆயினும், காலத் தின் கட்டளையால் இவ்வாறான ஒரு நிலமை ஏற்பட்டது எனக் கருதி அவர்கள் அதை மறுக்காது இருந்து வந்தனர். இவனுடைய வருமானத்தைக் கொண்டு, அவன் வருமானத் தின் சிறுசிறு பகுதிகளைச் சேமிப்பு எனற பெயரில் ஒரு தொகைப் பணத்தை தேடிய பின்னர், அவள் பெரிய பெண்

ணாகிய அர்த்தம் புரிந்து அவளிற்கு மாலை சூடவென ஒரு வரனைத் தேட முற்பட்டனர். மாலை சூடவென தேட முற்பட்ட னர் என்பதைவிட, வலைபோட முற்பட்டனர் என்றே சொல்ல லாம். அப்போது அவளுடைய வயது ஒரு பிரச்சினையாகி விட்டதை உணர்ந்தனர். வயது வந்தவுடன் பெண்ணைக் கட்டிக் கொடுத்துவிட வேண்டும் என் கின்ற ஆன் றோரின் அறிவுரை



கள் இப்போதுதான் இவர்களுக்கு உறைக் கத் தொடங்கியது.

எத்தனை இடங்களில் இருந்து அவளிற்கு வரன்கள் வருவ தும், வந்த இடங்களில் ஒன்று பிடித்து ஒன்று பிடிக்காமல் போனதும் என எத்தனை மாப்பிள்ளைகளுக்கு இவள் மனதால் மாலை சூடி இருக்கிறாள். ஒவ்வொருமுறையும் வருகின்ற மாப்பிள்ளையையும், மாப்பிள்ளை வீட்டாரையும் குறிப்பிட்டு எத்தனை கற்பனை வாழ்க்கைகளில் இவள் மிதந்திருப்பாள். இவளுடைய உறவினர்கள்கூட ஒவ்வொருமுறையும் இவளை அலங்கரிக்கும்போது மாப்பிள்ளை பார்த்தாரென்றால் அப்படியே வீட்டிலை இருந்திடப்போறார். நாங்களெல்லாம் ஆண்பிள்ளை யாயப் பிறக்கவில்லையே என்று கவலையாய் இருக்கின்றது என்ற வகையில் இவளை நக்கல் அடிப்பார்கள். ஒவ்வொரு முறையும் வந்த மாப்பிள்ளைகளுக்கு அவளைப் பிடிக்கத்தான் செய்தது. ஆனாலும் அவளிடம் பிடிப்பு ஏற்படுவதற்கு உரிய பசைத்தன்மை குறைவு என்பதை உணர்ந்தோ என்னவோ, அவர்கள் வீட்டுக்குச் சென்று கடிதம் போடுகிறோம் என்று முகவரி வாங்கிச் செல்வார்கள். அவ்வாறு வந்த மாப்பிள்ளைக ளுக்கு முகவரிகளைக் கொடுத்து, தன் முகவரிகளை இழந்து இன்றும் அவள் அழகோடு இருக்கின்றாள். இப்போதும் அவ ளின் அந்தநிலை அவளை தேவதை ஒன்று வந்து நிற்கின்றது என்றுதான் கூறச்செய்கிறது.

இவ்வாறு தன்னைப் பெண் பார்க்க வந்த கூட்டத்தினரை யும், அவர்களது போக்கினையும் பார்த்துப் பார்த்துச் சலிப்ப டைந்த அவள் மனத்தில் இறுக்கம் ஏற்பட்டது. பாஞ்சாலி 5 பேருடன் தானே வாழ்ந்தாள். இப்போது நான் எத்தனை பேரோடு வாழ்ந்துவிட்டேன். மனதால் வாழ்கின்ற வாழ்க்கை யின் அர்த்தம் புரிந்தால் எத்தனை கணவன் என்னுடைய பள்ளியறைக்குவந்து வாசல்வரை வந்து திரும்பிச் சென்றிருப் பார்கள். ஒரு கவிஞன் எழுதினான் - 'இராமன் என்று ஒருவன் வரமாட்டானா? என்று ஏங்கியதைவிட இராணவனாகிலும் வந்து என்னை மணம்முடிக்க மாட்டானா? புட்பக விமானத்தில் என்னை ஏற்றிச்செல்லாவிட்டாலும், கள்ளத் தோணியில் என் னைக் கூட்டிச்செல்லமாட்டானா என்று ஏங்கியவளாக ஒரு முதிர்கன்னி

இருந்தாள்' என்ற இவ்வாறான ஒரு நிலையில் லவா எனக்கு ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு பலவாறாக எண்ணிய வள், தன் மனதிலே ஒரு உறுதியான முடிவினை எடுத்துக்கொண்டாள்.

எந்த ஒரு ஆடவனையும் திரும்பிப்பார்க்காத எனக்கு- என்னுடைய அழக்கிற்கு என்னைப் பெண்பார்க்க வருகின் றவர்கள் ஏன் என்னைப் பிடிக்கவில்லை என்று கூறிச் செல்கின்றார்கள். என்னுடைய ஜாதகத்திலும் எந்த ஒரு பாவக்கிரகமும் இல்லை என்றுதானே சோதிடனும் கூறி னான். இறைவனே! ஏன் என்னை இவ்வாறான மனக் கஷ்டங்களுக்கு உட்படுத்துகின்றாய். என்னால் எத் தனை பேருக்கு கஷ்டமாக இருக்கின்றது. அம்மா, அப்பா, அண்ணா என்று இவர்கள் எல்லாம் ஓடித் திரிகின்றார்களே. அவர்கள் இவ்வாறு ஓடித் திரிந்தும் என்னுடைய நாயகன் என்று ஒருவனும் வரவில்லையே. ஆண்டவனே எனக்கு நீ தான் அருளவேண்டும். இவ்வாறெல்லாம் இறைவனைப் பிரார்த்தித்த வண்ணமாக அவள் வாழ்க்கை புதியதொரு வழியில் சென்றது.

இறைவனே எனக்கு ஒரு மணவாள னைக் காட்டும் வரையிலும் நான் உனக்கு மாலைகளைச் சூடத் தருவேன். அதற்காக என் வீட் டில் நிறையப் பூ மரங்களை நடுவேன். அப் பூ மரங்களில் பூக்கின்ற ஒவ்வொரு பூக்களை யும் வாடவிடாது பறித்து உன் சந்நிதிக்கு மாலையெனத் தரு வேன். நானுன்னை மணம் வீசச் செய்வேன். என்னை நீ தான் மணக்கோலத்தில் இருக்கச் செய்யவேண்டும் என்ற பிரார்த்த னையோடு, அவள் அந்த ஆல யத்திற்கு ஒவ்வொருநாளும் பூக்களைப் பறித்து, பூ மாலை கட்டிக்கொடுத்து வருகின் றாள்.

ஆலயத்தில் பூ மாலைகளை சூடக் கொடுப்பதும், அதில் ஆண்டவன் எவ்வளவு அழகுடை யவனாக இருக்கின்றான் என்ப தில் மகிழ்ந்தும், அவள் தன்னு டைய வாழ்க்கையை நகர்த்தி வருகின்றாள். அவளுடைய அந்த அமை தியான வாழ்க்கை யினிடையே அவள் வாழ் வின் தென்ற லெனக் கரு துகின்ற வகை யில் ஒரு தென் றல் வீசியது. அவளுடைய வாழ்க்கை யில் வீசிய அந் தத் தென்றலின் இனிய நினைவுகள் - அவள் மனதை விட்டு என்றும் அகலாதனவாக இருக்கும்படி நிலைத்து நின்றிருக்குமானால், அவள் வாழ்வு எவ்வளவு தூரம் சொர்க்க வாழ்வாக மலர்ந்திருக்கும்.

வழமைபோல அவள் ஆலயத்திற்குச் சென்று வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். ஆலயத்திற்கும் இவளுடைய வீட்டுக்குமிடையே ஒரு அரைகிலோ மீற்றர் தூரம்வரை இருக்கும். அந்த இடைவெளியில் அவள் நடந்து வந்துகொண்டிருப்பாள். அவள் அவ்வாறு நடந்து வந்துகொண்டிருந்த ஒரு நாளில்தான், அவளை அவன் கண்டான். அவன் அந்த ஊரிலுள்ள தொழிலதிபர் ஒருவரின் மகன். இவளுடைய சொந்த உறவுமுறையும்கூட. ஆனால், இவர்கள் குடும்பங்களுக்கு இடையே அவ்வளவு நெருக்கம் கிடையாது. அவன் அண்மையில்தான் தொழிற்பயிற்சி ஒன்றிற்காக வெளிநாடு ஒன்றிற்குச் சென்று வந்திருந்தான். இதன் காரணமாக அவன் அவளைச் சந்தித்திருக்க நியா யம் இல்லை. அவனை அவளும் கண்டாள்.

அன்று கண்டதும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிநேகமாக சிரித்துக்கொண்டார்கள். அவன் அன்றைக்கு ஒரு நாள் வீட்டுக்கு வந்து, தன் தாய் தந்தையருடன் தன் உறவுமுறை பற்றிச் சிரித்து கதைத்துவிட்டுச் சென் றது, அவள் மனத்திரையில் இருந்தது. அவள் நீண்ட காலமாகத் திருமணம் செய்யாமல் இருப்பது பற்றியும் அவளது பெற்றோர் அவனிடம் தெரிவித்திருந்தனர். தம்பி எங்களுடைய மகளுக்கு திருமணப் பேச்சு நடந்துகொண்டி ருக்கிறது. உங்களுடைய அப்பாகூட ஒரு முறை ஒரு பையனை பார்த்துக்கொண்டு வந்தவர்.

(தொடரும்)

## நூல் அகம்

# அப்பா




அப்பா என்ற தலைப்பிற்கு ஏற்ப இந்த அப்பாவை எழுதியவர் தில்லைநடராஜா என்பவர் ஆவார். அட்டையில் தாங்கிவரும் அவரின் படத்தைப்பார்த்தாலே நன்குதெரியும். அவரின் பார்வையின் வெளியே மேவிப்பாயாத குளத்தண்ணீர்போல் இவரின் வாழ்வில்... தமிழ் கலாசார பரிமாணம்கொண்ட குளக்கட்டுக்குள்ளே மேவிப்பாய்ந்த வண்ணம் கட்டியிருக்கிறார்.

மல்லிகைப் பந்தலின் உதிர்ந்த பூக்களில் அப்பா என்ற ஒரு பூ, மணம் வீசி நிற்கின்றது. அப்பாவிடமுள்ள அணிகலங்களாக டொமினிக்ஜீவா எழுதிய அணிந்துரை அழகூட்டியிருக்கின்றது.

இந்தப் புத்தகத்தில் அப்பாவின் ஒவ்வொரு பக்கதிலும் நல்ல கருத்துக்களையும், வாழ்க்கையின் ஓட்டத்தில் பயனுள்ளதாய் நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஒவ்வொருநாளும் கழிந்துபோன நல்ல விடயங்களையும் விதைத்திருக்கின்றார்.

இதைப் படிக்கும்போது, நமக்குத் தெரியாத எவ்வளவு தவறுகளை நாம் விட்டிருக்கின்றோம் என எண்ணமுடியும். இப்பொழுது அப்பாவாகவுள்ளவர்களும், இனி அப்பாவாகப் போகின்றவர்களுக்கும் இந்த அப்பா ஒரு உதாரணம்.

இலகுவாகப் புரிந்துகொள்ளும் விதத்தில் மொழி இங்கே அங்குமிங்கும் ஓடி, புத்தகமே வேர்த்திருக்கின்றது. கூடுதலாக இதனால் இலகுவாகத் துடைத்துவிடமுடியும் படிப்பவர்கள் தமது அழுக்குகளை.

ஆலமர்ம் மேலே படர்ந்து சென்று, கீழே ஒரு புல்லினையும் வளரவிடாது. அதேபோல் நம் வாழ்க்கையில் நமது குடும்பப்பக்கமே கூடுதலான நன்மைகளைப் பார்த்து...

இதனால், மற்றவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை யாரும் எதிர்பார்ப்பதில்லை.

இவர் செய்த பணிகளில் நல்ல தீர்வுகளைப் பெறாத சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பத்தில்லை என்பது முக்கியமானதாகும் ஒரு பிச்சைக்காரனால்கூட மற்றவர்களின் வெறுப்பைச் சம்பாதிக்காமல், தன் தேவைகளைக் கௌரவமாகவும், ஒழுங்காகவும் பெறமுடியும் என்பதையும் உணரமுடிகிறது.

உடுப்பைச் சுற்றிக்கொண்டு வந்த பழைய செய்தித்தாளின் நிலை உயர்ந்தது. அச்சிடப்பட்ட செய்தித்தாளின் - அச்சிடப்படாத ஓரங்களில் பாரதியார் கவிதைகள் எழுதியதாகவும், தெருவிளக்கில் இருந்து படித்ததாகவும் அப்பா சொன்னார் என்றால், பாரதியாரின் வழியிலும் நிறைந்திருக்கிறார்.

பேயோட கூட பழகிட்டா விட்டுவிட்டு போயிட மனம் வராது. பணத்துக்காக நல்ல மனிசரை விட்டிட்டு போறதுக்கு எனக்கு இஷ்டமில்லை என்கிறார்.

பணத்தின் பெறுமானம் அதிகமாக வேறுபாடு அடைந்துவிட்ட இந்த நாட்களில், பெரும்பாலான மக்கள் ஒவ்வொரு சதத்தையும் தக்க வைத்திருப்பதில் மிகக் கவனமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கொள்வோர் ஒரு சதத்தினையும் மேலதிகமாக கொடுக்க விரும்புவதுமில்லை. இதற்கு மாறுபட்ட அப்பா.

கோபம்கொள்ள வேண்டி வேளையில் சிரித்து சமாளிக்கும் சாமர்த்தியம், சிநேகத்தை வளர்க்கும். இப்படியாகப் பலவற்றை அப்பாவிடம் இருந்து பெற்றது என்று சொல்லியிருக்கின்றார். அவர் செய்த செயலில் இவர் எழுதிய எளிய உரைநடை பாராட்டக் கூடியது.

**செல்வா**

# கிழக்கும் மேற்கும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் வீரமாமுனிவரும்



சிதம்பரம் சென்னை போன்ற
தமிழக நகரிலொல்லாம்
சிகரம் போல் இவரின் தொண்டு
சிறந்திட; இவரைப் போற்றித்
தமிழக மக்கள் இவர்க்கு
"நாவலர்" பட்டம் தந்தார்!
தமிழகத் தன்பு கண்டு
தமிழரேபெருமை கொண்டார்!
தமிழினுக் கனிகள் சேர்த்து
ஐம்பத்து ஆறு ஆண்டாய்த்
தமிழுடன் சைவம் இரண்டும்
கண்கள் போற் காத்து நிற்றார்!
சிவநெறி காக்கும் சக்தி
மிக்கதோர் அரணாய் நின்றார்!
சிவநெறி பரப்பில் ஐந்தாங்
குரவாய் என்றும் உள்ளார்!
இறையன்பால் தொண்டால் அறிவால்
உயர்ந்த இப்பெரியார் யாரோ?

இறையன்பாற் தமிழர் பெற்ற
ஆறுமுக நாவலர்ப் பெரியோன்!!

இத்தாலி நாட்டிற் தோன்றித்
தமதரும் சமய மான
கத்தோலிக் கத்தை யெங்கும்
பரப்பிடத் துறவை ஏற்றுத்
தமிழகம் வந்து சேர்ந்து
ஐம்பது ஆண்டு காலம்
தமிழக மண்ணில் வாழ்ந்து
தமிழினைக் கற்றுத் தேர்ந்து
தமிழகப் பண்பை யெல்லாம்
மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு
தமிழகத் துள்ளோர் ஏற்றுக் கொண்டு
தமிழகத் துள்ளோர் மெச்சத்
தமிழனைப் போல வாழ்ந்து
மேற்குள்ளோர் தமிழைப் பற்றி
அறிந்திடும் வண்ணம்; தமிழர்
போற்றிடும் நீதி நூலாம்
திருக்குற ளதனை லத்தீன்
மொழியினிற் பெயர்த்துத் தந்து
"தொன்னூல் விளக்கம்" என்னும்
மொழியினை விளக்கும் இலக்கண
நூலினை ஆக்கித் தந்து
தமிழ்மொழிச் சொற்களுக்குப்
பொருளினை அறிய ஏற்ற
தமிழ்மொழி அறிந்தோர் போற்றச்
"சதுரகராதி" ஆக்கித்
தமிழிலே முதன்முத லாயோர்
அகராதி படைத்துத் தந்து
தமிழிலோ ரிடத்தைப் பெற்றார்!
தம்பணி சிறக்க நின்றார்! *(தொடரும்)*

**முருகு**

# அடிச்சுவடு தெரியாமல்



காலக் கடவையின் நினைவுகளை
நெஞ்சினில் கோர்வையாக்கி
கிழிக்கும் உடலைத் தைக்கும்
முயற்சியில் முயல்கிறேன்...!

முகங்களில் வீசும் புன்னகையோடு
முத்துச் சாரலில் சிந்தும் வியர்வை...
கடிவாளமிடப்படாத கனவுகளாய்
கழுவப்படும் வாழ்வுகளைப் படிகள் ஒவ்வொன்றும்
எந்தன் உணர்வுகளைச் சித்தரிக்குதே...!
முகங்களால் மறைந்து புருவங்கள் காட்டும் சில உடுக்கள்
முகவரியிடப்படாத தேசத்தில் - என்னைத்
தேடலின் பிணைப்பினில் தள்ளிவிடடு...;
விழிகள் ஒளியை அணைக்க
விடிதலில் வரும் நிலவாய் - எந்தனது
துயில் படிந்த வாழ்வை
தன்னுள் அணைக்குதே...!

புயல்காற்று புழுதியில்
புரட்டிப் போடப்பட்டது...!
விறைத்த உடல்கள்
குளிர் காய்வதற்காய்;
கொட்டும் மழையும்,
கொழுத்தும் முற்றத்து வெயிலும்...

போர் தொடுத்த பொழுதுகளெல்லாம்
புயலில் வெறுத்துப் பார்க்க;
மரணத்தின் பிடியில் விலகிட
அவிழ்த்து விடப்பட்ட இறங்கு கயிறுகள் - யாவும்
உயிரணுவில் அக்கினிப் பெருமூச்சுடன்
அடிச்சுவடு தெரியாமல்...!

**என். பிரேமசீலன்**

# கடவுள் பக்தி!

மூன்று தடவைகள் கந்தர்சஷ்டி விரதம் பிடித்தது இந்தியாவில்தான். நான்காவது தடவையாக நல்லூர் கந்தசாமி கோயிலில் விரதத்தைத் தொடர்ந்தேன். அன்றைய முதல்நாள் நான் கோயிலுக்குப் போனபோது...

தீர்த்தக்கேணியின் அருகாமையிலும் - அங்கெங்கே சுற்றி ஒவ்வொரு மூலையிலும் கந்தர்சஷ்டி கவசப்புத்தகத்துடன் கூட்டம். நிலத்தில் இருந்தபடியும், முடியாமல் தூங்கிணபடியும் இருந்தார்கள். சுற்றி ஒருதடவை முருகனை வணங்கிவிட்டு கேணிப்பக்கத்தில் சென்று அமர்ந்தேன்.



'இது முதல் வருடமா...?' என்றார் பக்கத்தில் இருந்தவர். 'இல்லை...' என்று சொல்லி அவரைத் திரும்பிப்பார்த்தேன். 'எங்கையோ பார்த்ததுபோல் இருக்கின்றது' என்றேன். பதிலுக்கு அவரும் இதையே சொல்லித்தொடர்ந்தார்... 'நான் இந்தவிரதம் பிடிக்கவில்லை. சும்மா கோயிலுக்கு வந்தனான். எனக்குக் கடவுளைப் பிடிக்காது' என்று, ஒருபோடு போட்டார்.

எனக்கென்றால் ஏன்டா இவருடன் கதைத்தனான் போலிருந்தது. அவரும் விட்டபாடில்லை. 'கடவுள் எங்கே இருக்கின்றார்?... பார்த்தனீரா?... இல்லையே... பிறகு எதற்கு விரதம். இதெல்லாம் தேவையில்லாததொன்று. எல்லாம் தன்நம்பிக்கையில்தான் இருக்கின்றது'. என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

அப்பாடா... இப்பதான் இவர் என்னைவிட்டுவிட்டார் என்று ஆறுதலடைய, என் முதுகினை தட்டியபடி எனது நண்பன் திக்கத்து முகுந்தன் பக்கத்தில் வந்து இருந்தான். முகுந்தனிடம் என்னுடன் கதைத்துவிட்டுப் போனவரைப்பற்றி விசாரித்தேன். அவன் சொன்னான்... 'போன... நல்லூர் திருவிழாவில்தான் தூக்குக்காவடி எடுத்தவனென்று. ஏன்...? இப்படிப் பேசினான் என்று ஒன்றுமே புரியாதபடி திகைத்துநின்றேன்.

**செல்வம் துன்னாலை**

சர்வதேச அரசியல்... கே.ரீ.கணேசலிங்கம்



**முரட்டுத்தனமான தாக்குதல் ஜனநாயகத்துக்கு பின்னுள்ள பொருளாதாரத் தளர்வுகளை அவதானித்தால், அமெரிக்க ஜனநாயத்தின் சுரண்டல் வடிவம் நன்கு தெளிவாகும். கூட்டாக சுரண்டுவதைத் தவிர்த்து, தனித்து அமெரிக்கா சுரண்டுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளே அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றது. ஈராக்கைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் அமெரிக்கா, படிப்படியாக ஏனைய அயல் நாடுகளையும் அச்சுறுத்தி வருவதன் உள்நோக்கமும் அதுவாகவே உள்ளது.**

# துப்பாக்கி ரவைகளிலிருந்து அமெரிக்கர்களின் நவீன ஜனநாயகக் கோட்பாடு உதயமாகிறது!

ஈராக் மக்கள் ஜனநாயகத் தேர்தலை நிராகரித்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கியுள்ளனர். போலியான, ஏமாற்றுத்தனமான அணுகுமுறை என தேர்தலை விமர்சித்ததுடன், பிரித்தானிய, அமெரிக்க அரசுகளின் நலன்களை மட்டும் இலக்காகக்கொண்ட தேர்தல் நிராகரிக்கப்படவேண்டுமென ஈராக்கிய ஷியா முஸ்லிம் தலைவர் ஒருவர் எச்சரித்துள்ளார். ஆனால், அமெரிக்க, பிரித்தானிய அரசியல் தலைமைகளே ஈராக்கில் ஜனநாயத்தை மலரவைக்கப்போவதாகவும், சுதந்திரத்தை அந்த மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்போவதாகவும் சூளுரைத்துள்ளனர். இவ்வாரம் அமெரிக்க ஆட்சியாளர்கள் உருவாக்கியுள்ள புதிய ஜனநாயகக் கோட்பாடுகளை மதிப்பீடு செய்வோம்.

கிரேக்க அரசியல் சிந்தனையிலும், கிரேக்க ஆட்சிமுறையிலும் நேரடி ஜனநாயகம் பற்றிய கருத்துப் பரிமாறல் இருந்தபோதும், மேற்கு நாடுகளின் முதலாளித்துவ சக்திகளின் காப்பரணாக ஜனநாயகம் என்பது உருவாக்கப்பட்டு வந்தது. ஜனநாயகத்தின் ஆரம்பம் கிரேக்கம் என்பதுபோல் ஐரோப்பா அதன் மத்தியகாலமெனவும், நவீன ஜனநாயகத்தின் தோற்றம் அமெரிக்க என்றும் பொதுவாகவே கூறப்படுகின்றது. அத்தகைய அமெரிக்கர்கள் ஜனநாயகத்தை தாராள ஜனநாயகமெனவும், நவதாராள ஜனநாயகமெனவும் வகைப்படுத்திக் கொண்டனர். முதலாளித்துவ உலகம் போன்று சோஷலிஸவாதிகளும் ஜனநாயகத்தை வகைப்படுத்த தவறவில்லை. அவற்றில் மிகப் பிரபலமான ஜனநாயகக் கோட்பாட்டை மாவோ சேதுங் முன்வைத்தார். அதுவே, புதிய ஜனநாயகம் எனப் பேசப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியும் அவரது சகாக்களும் உருவாக்கிக்கொண்ட ஜனநாயகம் இரண்டு பிரதான கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. முதலாவது (வெள்ளியிலான) துப்பாக்கி ரவைகள் கொண்ட ஜனநாயகக் கோட்பாடு **(Theory of silver bullet democracy).** இதனூடாகச் சொல்லப்படும் செய்தி - உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஜனநாயத்திற்கு தயாராகுதல் வேண்டும். முடி, மன்னன் போன்ற ஆட்சிகளை முடிவுக்குக்கொண்டு வருவதுடன், தேர்தல்- ஜனநாயகத்தின் இன்னொரு வடிவமாகவும், மக்களின் வாழ்வுக்கும் மகிழ்வுக்கும் பின்னால் ஜனநாயகம் அவசியம் எனவும், கூறுகிறது. இந்தக் கோட்பாடு நவதாராண்மை வாதத்தை வசீகரிக்க திட்டமிடுவதுடன், அதனை முழு உலகத்திலும் அமுல்படுத்துவதிலும் இராணுவத்தை - படைப்பலத்தை பிரயோகிக்க திட்டமிட்டிருப்பதைக் குறிப்பிடுவதாக உள்ளது.

இரண்டாவது மூர்க்கத்தனமான தாக்குதல் ஜனநாயகம் **(Theory of long hard slog demo Cracy)** கோட்பாடாகும். இதுவும் முதலாவது அம்சத்தின் தொடர்ச்சியாகவே உள்ளது. ஆனால், இது பலமான ஜனநாயக அரசியல் நிறுவனங்களைக் கட்டி வளர்ப்பதுடன், சந்தைப் பொருளாதாரத்தையும் அதற்கான சிவில் சமூகத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டது. இந்த ஜனநாயகத்தில் ஒழுக்க கோவை- தேவையான பொருளாதார சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதுடன், வர்த்தகம், நாணயப் பரிமாற்றம் கல்வி மற்றும் சட்டரீதியான முன்னேற்றங்கள் நிகழ்வதாகவுள்ளது. அவை ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், முரட்டுத்தனமான தாக்குதலை ஜனநாயகம் எதிர்பார்க்கிறது. இதில் இதன் பிரதிபலிப்பாகவே ஈராக்கின் பொருளாதார உதவிகளை அமெரிக்கா கூறியபோது, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய நாடுகள் அமையங்கள் முன்வந்துள்ளமையும், அரபுலகத்தின் அபிவிருத்தி அறிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி அவற்றைப் முதன்மைப்படுத்தியிருந்தமையும் ஆதாரமாகக் கொள்ளமுடியும்.

இனி விடயத்திற்கு வருவோம். முதலில் அமெரிக்கர்கள் கோரும் துப்பாக்கி ரவை ஜனநாயகத்திற்கும், சீனர்கள் குறிப்பிட்ட துப்பாக்கி முனையிலிருந்து ஜனநாயகம் பிறக்கிறது என்பதற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. சீனர்கள் சீனாவிற்குள் செய்ததை, அமெரிக்கர்கள் வெளியுலகத்தில் மேற்கொள்கின்றனர். அமெரிக்கர்கள் ஜனநாயகத்தில் மட்டுமல்ல உண்ணும் கோதுமையிலும் அவ்வாறுதான் தமது மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் ஒருவகை கோதுமையை உற்பத்தி செய்வதும், ஏற்றுமதிக்கு இன்னோர் மாதிரியான கோதுமையை உருவாக்குவதும் அவர்களது இயல்பாகும்.

அமெரிக்காவின் பிரதான இலக்கு மேற்கு ஆசியா என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மிகநீண்டகாலமாகவே மேற்காசியாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்த அமெரிக்கர்கள் முயன்றார்கள். அதனை சுதந்திரம் என்றும், ஆட்சியாளர்களின் அடக்குமுறையில் இருந்து மக்களை மீட்டெடுப்பது என்றுமே அமெரிக்கர்கள் கூறுகின்றனர். இது அமெரிக்காவின் ஒரு வகையான புதிய கொள்கையாகக்கூட அளவீடு செய்து கொள்ளலாம். அதாவது, மேற்காசிய மக்களின் சுதந்திரம் என்பது- அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு புதிய அம்சம் சி.ஐ.ஏ. என்ற அமெரிக்க உளவு நிறுவனத்தின் 2003 ஆம் ஆண்டறிக்கையிலும், மேற்காசியா மீதான கொள்கை பற்றிய பல தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாம் அல்லது அரபுக் கலாசாரத்திற்குப் பலியாக சுதந்திரம் அல்லது ஜனநாயக கலாசாரத்தை வளர்ப்பதே பிரதான கொள்கையாகவுள்ளது. அதனை அமுலாக்குவதன் வாயிலாக மேற்காசியாவின் பொருளாதார வாய்ப்புக்களை அமெரிக்கா பயன்படுத்துவதுடன், ஏமாற்றுத்தனமான- பொம்மையான மேற்குக்குச் சார்பான ஆட்சி அமைப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்வதே நோக்கமாகவுள்ளது.

ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக நவீனத்துவத்தை மேற்காசியாவிற்குள் பரப்பலாம். நவீனத்துவம் என்பது மேற்காசிய கலாசாரத்திற்கு மாற்றாக மேற்கத்தேய கலாசாரத்தை அமுலாக்குவதாகும். மேற்குலகம் கூறுவதுபோல்- பின்தங்கிய கலாசாரத்தை அகற்றிவிட்டு, நவீனத்துவத்தை ஏற்படுத்தி மக்களை சுதந்திரமான தேசத்துக்கு கொண்டுவருவது என்பது, மேற்குலகத்தில் கலாசாரத்தை பரப்புவது ஆகும். ஏனெனில், இஸ்லாமிய கலாசாரம் இலகுவில் தகர்க்கமுடியாதது. உடைத்துவிட்டு புதியவற்றை மத அடிப்படையில் புகுத்தமுடியாது. ஏனைய முஸ்லிம் அல்லாத இனங்கள் வாழ்ந்த நாடுகளில் மதத்தை மாற்றுவது இலகுவான விடயம். மக்களை மதம் மாற்றச்செய்வது கடினமானதல்ல. அதனால், மேற்குலகத்தின் ஒட்டுமொத்தமான ஆட்சிமுறைகளையும், பழக்க வழங்கங்களையும் பின்பற்றி வாழ்வதுடன், இஸ்லாமியர்கள் அல்லாதவர்களில் அநேக மானவர்கள் மேற்குலகத்தவர்கள் மாதிரியே காணப்படுகின்றனர். இந்த மேற்குலகத்துக்குள் அகப்படாத அரபுக்கள்- தமது மதத்தினால் பாதுகாக்கப்பட்டு வந்தனர். தற்போது அதனையும் மதத்துக்குப் புறம்பாக சுதந்திரம், ஜனநாயகம், பொருளாதாரம் என்ற நவீன சொற்பிரயோகங்களால் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு அமெரிக்கர்கள் செயற்படுகின்றனர்.

அமெரிக்கா- உலக நாடுகளின் ஜனநாயகத்தை விருத்தி செய்வதற்காகப் பல மில்லியன் டொலர்களைச் செலவு செய்துவருகின்றது. மேற்காசியாவின் ஜனநாய விருத் திக்காக மட்டும் உதவிக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஆறு (06) சதவீதத்தை ஒதுக்கியுள்ளது. இது ஏறக்குறைய 700 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதனை அமெரிக்கா ஒரு முதலீடாகவே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய முதலீட்டின் இலாபத்தையும் அமெரிக்காவே அடைந்துகொள்ளும்.

முரட்டுத்தனமான தாக்குதல் ஜனநாயகத்துக்கு பின்னுள்ள பொருளாதாரத் தளர்வுகளை அவதானித்தால், அமெரிக்க ஜனநாயத்தின் சுரண்டல் வடிவம் நன்கு தெளிவாகும். கூட்டாக சுரண்டுவதைத் தவிர்த்து, தனித்து அமெரிக்கா சுரண்டுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளே அண்மைக்காலத்தில் அதிகரித்துவருகின்றது. ஈராக்கைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் அமெரிக்கா, படிப்படியாக ஏனைய அயல்நாடுகளையும் அச்சுறுத்தி வருவதன் உள்நோக்கமும் அதுவாகவே உள்ளது.

குறிப்பாக ஜோர்தான், சிரியா, ஈரான் என்பன மீது அமெரிக்காவின் எச்சரிக்கையும், அரசியல் பாய்ச்சலும் அதிக நலனை அடையும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுபவையாகும். அமெரிக்காவின் அணுகுமுறைக்கும், தேவைக்கும் இசைந்து தமது நாட்டுக்கொள்கைகளை மாற்றிக்கொண்டால், அவை அமெரிக்காவின் தாக்குதலிலிருந்து தப்பித்துவிடும். அவ்வாறு சீர்திருத்தங்களையும், அமெரிக்க சிபார்சுகளையும் ஏற்கத்தவறும் பட்சத்தில் ஆப்கானிஸ்தான், ஈராக் மாதிரியில் அமெரிக்காவின் தாக்குதல் காத்திருக்கின்றது. இரண்டுமே மேற்காசியாவுக்கு ஆபத்தானதுதான். அதாவது, எதிர்ப்பின்றி அமெரிக்கமயாக்கத்தை ஆதரித்தாலும், அமெரிக்க செல்வாக்கும், ஊடுருவலும், சுரண்டலும் தவிர்க்க முடியாதபடி அமையும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் போர் தவிர்க்கப்படும் வாய்ப்பு மட்டுமே காணப்படும். ஆனால், போர் ஏற்பட்டால் ஈராக் மாதிரியான நிலை ஆட்சியாளனுக்கும், மக்களும் ஏற்படும். அதன் பின்னர் அமெரிக்கா நேரடியான ஊடுருவலைச் சாத்தியப்படுத்தி, தனது நடவடிக்கைகளை இலகுபடுத்தும். எனவே, முழுமையான அரபுலகமும் மாற்றுக் கொள்கைக்கான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அத்தகைய கொள்கைக்கான அடிப்படை நவதாராளவாதம் என்றோ அல்லது ஜனநாயகம் என்றோ பேசப்பட்டுவருகின்றது.

அதற்குப் பின்னால் உலகமயவாக்கமல்ல, அமெரிக்கமயாக்கமே மறைந்துள்ளது. அமெரிக்கமயாக்கத்தின் பாதையே ஜனநாயகமாகும். ஜனநாயகம் என்பதற்குப் பின்னால் மறைந்திருக்கும் அபாயம் எச்சரிக்கையுடன் நுகரப்படவேண்டியது. இயல்பில் ஜனநாயகம் சிறப்பானதாக இருந்தபோதும், அவற்றைக் கையாளும் சக்திகள் மேற்கொள்ளும் அணுகுமுறைகளே அதனை பலவீனப்படுத்துகின்றது. கோட்பாடுகளை நடைமுறைக்கு மாற்றுவதென்பது சில சக்திகளின் நலனுக்காகக் கையாளுவதற்குச் சமமானதாக மாறிவிட்டது.

எனவே, மேற்காசியாவின் மீது ஏற்படும் திணிப்பு சாத்தியப்படுமாயின், அதன் திசை ஏனைய பிராந்தியங்களை நோக்கி அசையும். ஏனைய பிராந்தியங்கள் ஏற்கனவே அமெரிக்கா உட்பட, மேற்கின் தளுவல், ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் சக்திகளாகக் காணப்பட்டாலும், முழுமையாக அன்றி பகுதியாகவும், அரைகுறையாகவும் பல நாடுகள் பின்பற்றிவருகின்றன. அதனையும் அமெரிக்கா முறியடிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அப்போது முழு அரசுகள் மீதும் அமெரிக்காவின் ஆதிக்கம் சாத்தியப்படும். அதாவது, ஜனநாயகக் கோட்பாட்டின் மூலமாக அதனைச் சாத்தியப்படுத்த அமெரிக்கா முயலும் என்பதே அதன் அர்த்தமாகும்.

செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் முயற்சியும், சந்திரனுக்கு மீண்டும் மனிதனை அனுப்பும் புஷ்ஷின் திட்டமிடலும் தேர்தல் யுத்தியாக அமைந்தாலும், மீண்டுமொரு குடியேற்ற வாதத்துக்கான திட்டமிடலாகவே அமையவுள்ளது. அத்தகைய பாய்ச்சலுக்குள் மேற்காசியர்கள் தமது தனித்துவத்தை தக்கவைக்க புதிய உபாயங்களை வகுக்கவேண்டும். சதாம உசைன் மாதிரியான உபாயமும் அபாயமானது. அப்துல்லா மாதிரியான அணுகுமுறையும் ஆபத்தானது. எனவே, அமெரிக்கர்கள் உருவாக்கியுள்ள புதிய கொள்கையை சாதுரியமாகவும், தந்திரமான அணுகுமுறையாலுமே முறியடிக்கமுடியும். அரபுக்கள் மத்தியிலும் இஸ்லாமிய மதத்துக்குள்ளும் மறைந்திருக்கும் சிறப்புக்களை, ஆட்சியாளர்கள் வெளிக்கொண்டுவருவதுடன், அவற்றை முழு மேற்காசியாவுக்குள்ளும் பொதுமைப்படுத்தி, அமெரிக்கா முன்வைப்பவற்றை உள்வாங்கி பதிலளிப்பதுபோல் நகர்வுகளை மேற்கொள்வதே அவசியமானது.

எனவே, நவதாராண்மைவாதியான றொபேட் கேகன் குறிப்பிடுவதுபோல் சுதந்திரமும், தேர்தலும் ஜனநாயகமல்ல. சுதந்திரமான அரசியல் நிறுவனங்கள், சந்தைப் பொருளாதாரம், சுதந்திரமான ஊடகங்கள், மத்தியதரவர்க்கம் என்பவற்றின் உருவாக்கமெல்லாம் நலன்களை இலக்காகக்கொண்ட சக்திகள் அடைவதற்காக உருவாக்கும் விடயங்களேயாகும்.



**நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலையில் பெண்கள் விடுதியை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ். ரட்ணாயக்க நாடாவை வெட்டி திறந்துவைப்பதையும், அருகில் வடக்கு - கிழக்கு சுகாதார அமைச்சின் திட்டப் பணிப்பாளர் எஸ்.குமாரவேல் மற்றும் கலந்துகொண்ட தொண்டர்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.**

**படம்: கனகரவி**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
*போர்தாங்கும் தன்மை அறிந்து.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# இந்திய நோக்கில் சமாதானம்..! ?

இந்திய அரசின் இலங்கையின் அரசியல் இயக்கம் மீதான ஆதிக்க நடவடிக்கைகள் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா எந்த வகையிலும் தலையிடாது என ஒரு பேச்சுக்கு அடிக்கடி வெளிப்படையாக கருத்துக்கூறிவரும் இந்தய அரசு இலங்கையின் பொருளாதாரம், பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் அனைத்துள்ளும் தனது சுய அபிலாசைகள் மற்றும் பிராந்தியரீதியிலான அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்கேற்ப தொடர்ந்தும் தன்மூக்கை நுழைத்துவருகின்றது.

இந்த விவகாரம் அண்மைக்காலமாக அதுவும் சமாதான நடவடிக்கைகள் ஒரு முட்டுக்கட்டை நிலையை எட்டத் தொடங்கியபின் அதிகரித்த வேகத்தில் சற்று வெளிப்படையாகவே நிகழத் தொடங்கியுள்ளதை அவதானிக்ககூடியதாக உள்ளது.

1990களின் ஆரம்பத்தில் அதுவும் இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தின் பின் இலங்கை விவகாரங்களில் ஒருவித கோபம் கலந்த வெறுப்புணர்வுடன் எந்தவிதமான ஈடுபாட்டையும் வெளிப்படையாகக் காட்டாது ஒதுங்கியிருப்பது போன்று காட்டிக்கொண்டாலும் அனைத்து நிகழ்வுகளையும் உன்னிப்பாக அவதானிக்கத் தவறியதில்லை.

சந்திரிகா அரசு பதவியேற்றபின்னர் அதுவும் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமான பின்னர் இந்தியாவின் அணுகுமுறைகள் மீண்டும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் முனைப்புக் கொள்ளத்தொடங்கின.

போரின் தீவிரம் அதிகரித்தகாலங்களில் இலங்கையின் இறைமை உரிமை, ஒருமைப்பாடு போன்றவற்றில் தனக்குப் பெரிதும் அக்கறையுடன் கூடிய ஆர்வம் இருப்பதாக இந்திய ஆளும்வர்க்கம் கூறத்தொடங்கியதுடன் இலங்கைக்கு இராணுவ மற்றும் பாதுகாப்பு ரீதியிலான உதவிகளை தாமாகவே செய்யமுன்வந்ததை சந்திரிகா அரசும் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் இருந்தது.

யுத்தத்திற்கு உதவி அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான உதவியென்ற பெயரில் மேற்குலக நாடுகள் குறிப்பாக அமெரிக்காவும், அதற்குச் சார்பான நாடுகள் இலங்கைக்குள் பல்வேறு வழிகளாலும் ஊடுருவி தம்மை இலங்கையின் ரட்சகர்களாக காட்ட முனைந்து கொண்டிருந்த வேளையில், அதனை முறியடிக்கவேண்டிய அவசியம் இந்தியாவிற்கு இருந்தது.

இந்தியாவுக்கு எதிரான போக்குடைய பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆயுதரீதியிலான உதவிகளை செய்துகொண்டிருந்தமையும், இந்தியாவினால் சகித்துக் கொள்ள முடியாத விடயமாக இருந்ததில் வியப்பில்லை.

ஆனையிறவு விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாடு புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகைக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டபோது குடாநாட்டினுள் நிலைகொண்டிருந்த சுமார் 30,000 க்கும் அதிகமான படையினரைக் காப்பாற்ற இந்தியாவின் கால்களில் விழுவதைத் தவிர சந்திரிகாவுக்கு வேறுவழியிருக்கவில்லை. இது இந்தியா - இலங்கைமீது தனது மேலாதிக்கத்தை மீண்டும் செலுத்த வாய்ப்பான சூழலை உருவாக்கிக்கொடுத்தது.

ரணில் ஆட்சிக்கு வந்ததும் ஏற்பட்ட அரசியல் மாற்றம் சமாதான சூழலை ஏற்படுத்தியபோது, அதன் பின்னணியில் அதாவது சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்ட நோர்வேயின் வருகையுடன் மேற்குலகின் அதாவது, அமெரிக்க சார்பு நாடுகளின் உறவுகள் இலங்கை அரசுடன் வலுப்பெறத்தொடங்கியது.

இது இந்தியாவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தாத ஒன்றாகும்.

மேற்குலக ராஜதந்திரம் சமாதான நகர்வுகளில் இந்தியாவை தாம் புறக்கணித்துச் செயற்படவில்லை என்ற தோற்றத்தை உருவாக்கி பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்தியாவுக்கு அனைத்தையும் உடனுக்குடன் தெரிவித்துக் கலந்துரையாடியபோதிலும் இந்தியா அதில் திருப்தி கொண்டதுகிடையாது.

இந்த சமாதான முயற்சி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவ அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரோபாயத்தின் முக்கிய அம்சம் என்றே இந்தியா உணர்ந்திருந்தால் அதனை ஆதரிப்பதுபோல் வெளியில் காட்டிக்கொண்டாலும் மறைமுகமாக அதனை எதிர்க்கவும் அமைதி முயற்சிகளைக் குழப்பவும் சந்திரிகாவை - அதாவது ஜனாதிபதியை தனக்கான கருவியாக பயன்படுத்திக்கொண்டது.

சந்திரிகாவின் அதிரடி அரசியல் நடவடிக்கையால் ஏற்பட்ட குழப்பம் சமாதானத்தைப் புறந்தள்ளியதில் இந்தியாவுக்கு உண்டான திருப்தியை அண்மைக்காலத்தில் இந்திய ராஜதந்திரிகளான தீக்ஷீத், ராஸ்கோதரா, முனி ஆகியோர் வெளியிட்ட நுட்பமான கருத்துக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்தியாவில் ஹிந்தித்துவ கோட்பாட்டை ஆதரித்து முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையை தடுக்கமுடியாது மௌனம் காக்கும் பாரதீய ஜனதா அரசு இலங்கையின் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அழைத்துப்பேசி முஸ்லிம்களுக்காக உருகுவது வேடிக்கையான விடயம். சமாதான முயற்சியை குழப்பும் ஒரு சாதனமாகவே முஸ்லிம் காங்கிரசையும், ஹக்கீமையும் இந்தியா கையாளத் தொடங்கியுள்ளது, இரகசியமான விடயமல்ல.

இதேவேளை, ஒரு காலத்தில் இந்திய விஸ்தரிப்பு வாதத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்த ஜே.வி.பி யை இந்தியா தனது காலடி யில் விழவைத்தமையானது சமாதானத்துக்கு எதிரான சக்தி களை இந்தியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தொடங்கிவிட்டமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆக இலங்கையில் சமாதானம் என்பதை இந்தியா நியாயமான முறையில் அங்கீகரிக்க விரும்பவில்லை என்பதையே அண்மைக்கால அதன் செயற்பாடுகள் உணர்த்துவதாக உள்ளது.

இது இந்திய அபிலாஷைகளுக்கு ஏற்ப ஒரு தீர்வை திணக்க முயலும் இந்திய ஆளும்வர்க்கத்தின் ஆழ்மனநோக்கம் இன்னமும் மாறவில்லை என்பதை உணர்த்தவே செய்கிறது.

## நாடும் நடப்பும்



செய்தி: முஸ்லிம் மக்களின் பிரச்சினையை பெரிதாக்கி குழப்பத்தை ஏற்படுத்த ரவூப் ஹக்கீமை இந்தியா பயன்படுத்துகிறது.

### கட்டுநாயக்க விமானநிலைய பாதுகாப்பு

# விமானப் படையை விலக்கியதால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை!

### விமானசேவைகள் நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்புப் பொறுப்பை விமானப்படையிடம் இருந்து, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டதால், விமானநிலையத்தின் பணிகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்று அந்த நிறுவனத்தின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாதுகாப்புப் பொறுப்பு மாற்றப்பட்டமை குறித்து அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்புப் பொறுப்பை விமானப்படையிடமிருந்து - விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் பாதுகாப்பு திணைக்களம் கடந்த 13 ஆம் திகதி பொறுப்பேற்றுக்கொண்டது.

பாதுகாப்பற்றதென்றரீதியிலோ அல்லது ஆபத்தான சூழ்நிலை என்றரீதியிலோ இப்போதைய அரசாங்கம் இந்த மாற்றத்தைச் செய்யவில்லை. அது ஒருபடி நடவடிக்கை மட்டுமே.

விமானநிலையத்தின் பாதுகாப்புப் பொறுப்பை படிப்படியாகக் கைமாற்றுவது என்ற முடிவு - இப்போதைய அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை. முன்னைய அரசாங்கத்தினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் விமானப்படையின் கட்டுநாயக்க தள கட்டளை அதிகாரியான எயர் கொமடோர் சி.எ.குணரத்ன 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி விமான நிலைய விமானசேவைகள் நிறுவனத் தலைவராக இருந்த எயர் வைஸ் மார்ஷல் அஞ்சலம் பீரிசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்.

இந்தக் கடிதத்தில், விமானப்படையிடம் இருந்து, விமான நிலையத்தின் பிரதான நுழைவாயில் சோதனைச்சாவடி, பொதிகள் சோதனைச்சாவடி, பயணிகள் பொதிகள் பிரிவு சோதனைச்சாவடி, வாகனங்கள் வெளிச்செல்லும் பகுதி, முக்கிய பிரமுகர்களுக்கான பயணிகள் சோதனைச் சாவடி ஆகியவற்றின் பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டிருந்தார்.

இந்த முடிவு பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்டதாகவே ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

விமானநிலைய, விமானசேவைகள் நிறுவனத்திடம் அப்போது நிலவிய ஆளணிப் பற்றாக்குறை, புதியவர்களை ஆட்சேர்க்காது, அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் வரையில் இந்த வேண்டுகோளை ஏற்றுநடக்க முடியாதிருந்தது.

பாதுகாப்புப் பணிக்காக விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள், கடந்த 12 ஆம் திகதி முதல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மாற்றம் விமானநிலையப் பாதுகாப்பில் எந்த வகையிலும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புக்கும், அவசர பாதுகாப்பு நடைமுறைகளுக்கும்- விமானப்படையும், விமானநிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படும். எமது நிறுவனம் விமானப்படையுடன் ஆகக்கூடியளவு ஒத்துழைத்துச் செயற்படும் என்றும் ஹேமசிறி பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# தற்கொலை மரணவீதம் கடந்த ஆண்டில் குறைவு

### பொலிஸ் அறிக்கையில் தெரிவிப்பு

2002 ஆம் ஆண்டைவிட 2003 ஆம் ஆண்டில் - தற்கொலை செய்துகொண்டோரின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகப் பொலிஸ் திணைக்கள அறிக்கைகள் கூட்டிக்காட்டுகின்றன. உலகில் தற்கொலை செய்துகொள்வோர் வீதம் அதிகமாகவுள்ள முதல் நாடாக இலங்கை கருதப்பட்டுவந்தது.

2002 ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் 4692 பேர் தற்கொலை செய்துகொண்டனர். அனுராதபுர மாவட்டத்தில் மட்டும் இதே வருடத்தில் 330 பேர் தற்கொலைசெய்துகொண்டனர்.

கேகாலை மாவட்டம் இரண்டாவது இடத்தில் இருந்தது. அங்கு 250 பேர் தற்கொலை செய்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் 100 பேரும், வவுனியாவில் 99 பேரும் இதே ஆண்டில் தற்கொலைசெய்துகொண்டனர்.

2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்தவருடம் தற்கொலை செய்துகொண்டோரின் எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி தென்படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தவருடம் ஜுன் மாதம் வரையில் தற்கொலை செய்துகொள்ளப்பட்டதாக 2037 பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்தக்காலப்பகுதியில் கேகாலை மாவட்டத்தில் அதிகபட்சமாக 140 தற்கொலை மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அனுராதபுரவில் 121 பேர் தற்கொலை செய்துகொண்டனர். இந்த மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளது. கம்பஹாவில் 118 பேரும், குருநாகலில் 114 பேரும் கடந்த வருடம் ஜுன் மாதம் வரையான காலப்பகுதியில் மட்டும் தற்கொலை செய்துகொண்டனர்.

1995 ஆம் ஆண்டு ஆகக்கூடுதலாகத் தற்கொலை செய்துகொள்வோர் வீதத்தில் இலங்கை முதலிடத்தில் இருந்தது. 1995 ஆம் ஆண்டில் 8519 தற்கொலை மரணங்கள் இங்கு நிகழ்ந்திருந்தன. 1996 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஏழாயிரமாகக் குறைந்தது.

இந்த எண்ணிக்கையுடன் ஒப்பீடுசெய்யும்போது, கடந்த இரண்டு வருடங்களில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டவில்லை என்று பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிஸ் பொதுசனத் தொடர்புப்பிரிவு அதிகாரிகள் - தற்கொலை மரணங்கள் அதிகமாக நிகழும் பகுதிகளில் - கல்வியூட்டல் நிகழ்வுகளையும், விரிவுரைகளை நடத்தியும், திரைப்படங்களை ஒளிபரப்பியும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.வாசி கொழும்பில் கொலை!

கொழும்பு தெகிவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் தொலைத் தொடர்புநிலையம் ஒன்றை நடத்திவரும் யாழ். வாசியான டானியல் இனந்தெரியாத சில நபர்களின் கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமடைந்தார்.

இதே தினத்தன்று கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் மாலைவேளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரும் கொலைசெய்யப்பட்டதுடன் வெள்ளவத்தைப்பகுதியில் தமிழரின் கடையொன்றையும் இனந்தெரியாத சிலர் கொள்ளையடித்துள்ளனர். இந்தவிடயம் தொடர்பாக கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(01)

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## சிங்கம்

*(மகம், பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*

மனத்துணிவும், அஞ்சா நெஞ்சமும் படைத்த சிங்க ராசி நேயர்களே!

வருஷாரம்பம் முதல் 28.08.2004 வரை குரு ஜென்மராசயில் சஞ்சரிக்கிறார். ஜென்மகுரு ராமர் வனவாசம் என்று சோதிட நூல்கள் கூறினாலும், நீங்கள் அடிக்கடி பிரயாணம் செய்வீர்கள். இக்காலத்தில் நற்பலன்களே கூடுதலாக நடக்கும். தொழில்துறை சிறப்பாக நடக்கும். சுறுசுறுப்புடன் இயங்கி எக்கருமத்தையும் சாதிக்கலாம். வீணான வைராக்கியம், பிடிவாத குணங்களைத் தவிர்க்கவும். சுப காரியங்களுக்காக பணச்செலவு செய்யநேரிடும். இதனால் பண நெருக்கடி ஏற்படலாம். சிக்கனமாகச் செயல்படுவது மிகவும் நல்லது. நீங்கள் நல்ல கருமங்களை ஆரம்பிக்கும்போது சில சமயம் தடங்கல்கள் ஏற்படலாம். என்றாலும் முடிவு நன்றாகவே அமையும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். பொருளாதார ரீதியாக ஒரு உயர்வும், நல்ல திருப்பமும் உண்டாகும். ஆவணிமாதம் குரு ஜென்மராசியை விட்டு 2 ஆம் வீட்டுக்கு வருகிறார். இது உங்களுக்கு ஒரு நல்ல அனுகூலத்தைக் கொடுக்கும். சனியின் சஞ்சாரமும், குருவின் சாரத்திலிருப்பதால் உங்களுக்கு இதுவரை ஏற்பட்டிருந்த தடங்கல்கள், முட்டுக்கட்டைகள் நீங்கும். அபிவிருத்தியும், உயர்ந்த சூழ்நிலையும் உண்டாகும். அரசாங்கம், வங்கி இவற்றின் ஆதரவுகிட்டும். குடும்பங்கள் பிரிந்திருந்தால் அவை ஒன்று சேரும். தடைகள் நீங்கி திருமணம் கைகூடும். சிலர் போலி விளம்பரங்களைக் கண்டு கைப்பொருளை இழக்கவும் நேரிடும். பொதுவாக சிங்கராசி நேயர்களுக்கு வருடத்தின் இறுதி மாதங்கள் பெரிய நன்மைகளும், சிறப்பான வாழ்க்கையும் அமையும்.

### பெண்களுக்கு:

நீங்கள் விடாமுயற்சியுடன் ஈடுபடும் கருமங்கள் யாவும் வெற்றியைத்தரும். சிறிய தவறுகள் ஏற்பட்டாலும், மனம் வருந்தத் தேவையில்லை. பெரியோரின் அறிவுரைகள் உறுதுணையாக இருக்கும். எக்கருமத்தையும் பலருடன் ஆலோசித்துச் செய்வது நன்று. ஆவணி மாதத்தின் மேல் நல்ல காரியங்கள் நடக்கும்.

### தொழிற்துறையினர் - வியாபாரிகள்:

திட்டமிட்டுச் செயற்படுவதால் வியாபாரம் சிறப்படையும். வருட முற்பகுதி நன்றாக இருப்பினும், அகலக் கால் வைக்காமல் சீரான அளவில் எதையும் செய்வது நன்று. ஏமாற்றங்களுக்கு இடங்கொடுக்காமல் இருக்கவும். ஆவணியின்மேல் தொழில்மூலம் பல சிறப்புக்களை அடைவீர்கள்.

### உத்தியோகத்தர்களுக்கு:

உங்களுக்கு தொழில் சீராக இருக்கும். எனினும், வேலைத்தாக்கம் கூடும். அரசாங்க ஊழியரைக் காட்டிலும் தனியார் துறையினர் கூடியலாபம் பெறுவர். ஆவணிமாதம் வரை கருமங்களைச் சரியாகச் செய்யமுடியாமல் திண்டாடவேண்டிவரும். அதன்மேல் நிம்மதியாகவும், வேகமாகவும் கருமங்கள் நடக்கும்.

### அரசியல்வாதிகளுக்கு:

உங்களுக்கும், மேலிடத்தினருக்கும் உறவுகள் பாதிப்படையும். மேலிடத்தவர் உங்களை வீழ்த்தப் பார்ப்பார்கள். சிலருக்கு மக்கள் தொடர்பால் நன்மை உண்டு. எதிலும் நிதானமாக நடந்துகொள்ளுங்கள். அரசியல் கிரகமான சூரியன் சஞ்சாரத்தால் நற்பலன் குறைவு.

### மாணவர்களுக்கு:

இவ்வாண்டு உங்களுக்கு நன்மையான காலம். கல்வியில் முன்னேற வாய்ப்புக்கள் கிட்டும். கல்வியில் தடைகள் ஏற்படாது. சிலருக்கு ஆவணி மாதத்தின்பின் வெளிநாடு செல்லும் பலனுண்டு. திட்டமிட்டு முன்னேறுங்கள்.



## கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கருமங்களை கச்சிதமாகவும், திறமையாகவும் செய்துமுடிக்கும் கன்னிராசி அன்பர்களே!

உங்களுக்கு இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்கள் நன்மையான பலன்கள் நிகழும். கல்விமான்கள் உழைப்பாளிகள் பல நற்பலன்களைக் காண்பர். வீடு வாங்கும் அல்லது வீடு கட்டும் முயற்சியில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய காலம். இதுவரை பகைமை சாதித்தவர்கள் உங்களிடம் மன்னிப்புக்கோரும் சந்தர்ப்பமாகும். இறைவன் திருவருள் உங்களுக்கு எல்லா வகையிலும் நன்மை பயக்கும். பல பெரியவர்களின் தொடர்பும் ஏற்படும். மார்ச் மாதமளவில் பொருளாதாரத்தில் சில பின்னடைவு ஏற்படலாம். பொறுத்திருந்து செயற்பட்டால் நன்மையுண்டு. முன்பு கொடுத்திருந்த கடன்கள் வந்துசேரும். நாளுக்குநாள் செல்வம் பெருகும். வியாபாரம் தொழில்துறை சிறப்பாக நடக்கும். வளமான எதிர்காலம் உண்டு. நீண்டநாள் போட்டிருந்த திட்டம் நிறைவுபெறும். உடல்நலன் நன்றாக இருக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். ஆவணி மாதத்தின்மேல் சற்று மாறுதலான பலன்கள் நடக்கும். வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால், கோபமாகப் பேசி பகையுணர்வை ஏற்படுத்தக்கூடும். சிறு சுகக்குறைவுகள் தோன்றும். குடும்பத்தில் கருத்துவேற்றுமை எழக்கூடும். முன்னெச்சரிக்கையாக நடத்தல் நன்று. ஆவணியின் மேல் புதிதாக எக்காரியத்தையும் ஆரம்பக்காதீர்கள். சமாதானமாக இருக்க முயற்சிக்கவும்.

### பெண்களுக்கு:

பொருளாதார ரீதியில் உங்களுக்கு நன்மையாகவே இருக்கிறது. திடீரென்று வேலை வாய்ப்புக்கள் கிடைக்கலாம். உங்களிடம் பலர் நல்லறிவு பெறுவார்கள். திருமணம், புத்திரப்பேறு, வீடு வாங்குதல் முதலிய நற்பலன்களும் ஏற்படும். ஆவணி மாதத்தின் மேல் ஏதாவதொன்றைப் பேசி மாட்டிக்கொள்ளாதீர்கள்.

### தொழிற்துறையினர் - வியாபாரிகள்:

உங்களின் நீண்டகாலத் திட்டங்கள் இப்போது நிறைவேறும். லாபங்கள் கிடைக்கும். கடைகள், இயந்திரங்கள் வாங்க நன்று. பொருளாதார ரீதியிலும் உயர்ச்சியுண்டு. அரசாங்க உதவியினால் எல்லாம் நல்லபடி முன்னேறும்.

### உத்தியோகத்தர்களுக்கு:

உங்கள் திறமைக்கு எல்லோரும் மதிப்புக் கொடுப்பார்கள். அதனால் - பதவி உயர்வு கிடைக்கலாம். உயரதிகாரிகளுக்கு உங்கள் மீது நம்பிக்கை ஏற்படும். எனவே, நல்ல முறையில் பணிவாக இருந்து முன்னேற்றமடையுங்கள். வீண் வாதங்களைப் பேசாதீர்கள். அது கண்டத்தைத்தரும்.

### அரசியல்வாதிகளுக்கு:

நீங்கள் நேர்மையாகப் பணிசெய்தால் முன்னுக்குவரும் வாய்ப்புண்டு. மேலிடத்தவரை அணைத்துக்கொள்வதால் பல நலன்களைப் பெறுவீர்கள். சிலருக்கு எல்லாமே நன்றாக நடககும். தசாபுத்தி பலம் குன்றியிருப்பின் வீழ்ச்சி காணும். வருடப் பிற்பகுதியை அவதான்மாகக் கழிக்கவும்.

### மாணவர்களுக்கு:

முதல் எட்டு மாதகாலம் உங்களுக்கு நல்ல பலன்கள் நடக்கும். எதனையும் சாதித்துக் கொள்ளலாம். வெற்றிவாய்ப்பைத்தரும் மாதங்களாகவே இருக்கும். ஆவணி மாதத்தின்மேல் சில மாணவரின் தொடர்புகள் உங்களைக் கீழே தள்ளிவிடும் ஆபத்துக்களுண்டு. எல்லா விடயங்களிலும் கவனமாக இருக்கவேண்டும்.

(தொடரும்)

---

**கல்லூரி பொன்விழாக் கட்டுரை**

# புண்ணியங் கோடி தேடிய புண்ணியர் நாகமுத்து



'அறம்செய்ய விரும்பு' என்பது தண்தமிழ்ச் செல்வி நம் ஔவை மூதாட்டி அறிவுறுத்திச் சென்றுள்ள அர்த்தமுள்ள அறிவுரை. அவர் உணர்த்தியுள்ள அறம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல எல்லாமாரக முப்பத்திரண்டாகும். அகிலாண்ட நாயகியாகிய அன்னையே இந்த முப்பத்திரண்டு அறங்களையும் காஞ்சியிலிருந்து செய்தார் எனப் புராணங்கள் பகர்கின்றன. இந்த முப்பத்திரண்டு அறங்களில் தலையாக அறமாக விளங்குவது எழுத்தறிவித்தலாகும். இதையே நம் பாட்டுக்கொரு புலவன் பாரதி சற்று விரிவாக

“இன்நறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னுள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

எனக் கூறுகின்றார். ஏழைக்கு எழுத்தறிவிக்கத் தம்மை அர்ப்பணித்துப் புண்ணியங் கோடி தேடிய புண்ணியர் நம்மில் பலர். நல்லை நகர் தந்த நாவலர் இவர்களுக்கெல்லாம் இவ்வரும் பணிக்கு அடியெடுத்துக்கொடுத்தவர். ஏழைக்குக் கல்வி, தாய்மொழிக்கல்வி, சமயக் கல்வி ஆகியவற்றுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுத்த முன்னரே- அதாவது நூறாண்டுகளுக்கு முன்பே நாவலர் பெருமான் இவற்றுக்கு முதன்மை கொடுத்து அவற்றை வளர்த்தவர். நாவலர் பெருமான் வழியை வழியை அடியொற்றியே, நம் கல்லூரியின் ஸ்தாபகர் தம்பு நாகமுத்துவும் செயற்பட்டவர். அன்னாரின் செயற்கரிய செயற்பாட்டின் பயனே யாழ்.நகரமத்தியில் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானின் அருளாட்சியில் வளர்ந்தோங்கி நிற்கும் எம் வைத்தீஸ்வராக் கல்லூரியாகும்.

### பிறப்பும், கல்வியும், தொழிலும்

பெரியார் நாகமுத்து இயற்கை வளத்தோடு கல்வி வளமும் செழித்தோங்கும் இடைக்காடு என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1868 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதி பிறந்தார். வண்ணார் பண்ணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டார். இவரது ஆரம்பக்கல்வி கந்தர்மடம் சைவப் பாடசாலையில் இடம்பெற்றது. அடுத்து யாழ்.பரியோவான் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியைப் பெற்றார். பின்னர் இந்தியா சென்று கல்கத்தாவில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கல்கத்தா பல்கலைக்கழகத்தில் **F.A** பட்டம் பெற்றார். இந்துக் கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்பொழுது மாணவர் உள, உடல், கல்வி நலன்களில் மிகுந்த அக்கறையெடுத்ததோடு, ஏழை பங்காளனான இவர் - வறிய மாணவர்களுக்கு உதவுவதில் முன்னின்றார். ஏழைச் சிறார்களுக்கு உதவுதல், அவர்களுக்கு அனுமதி, பராமரிப்பு



ஆகிய விடயங்களில் இந்துக் கல்லூரியின் அன்றைய நிர்வாகத்துக்கும் பெரியார் நாகமுத்துவுக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இவ்வாறு கருத்து மோதல்கள் ஏற்படவே, இந்துக் கல்லூரியில் தன் சேவையை உதறித் தள்ளிவிட்டு வெளியேறினார். இவரோடு அங்கு ஏழைச் சிறார்களுக்காகப் பாடுபட்ட மேலும் மூன்று ஆசிரியர்களும் தம் பதவிகளைத் துறந்து வெளியேறினர்.

### நாவலர் வழியில்

ஆசிரியர் நாகமுத்து நாவலர் பெருமானை நினைத்துப் பார்த்தார். சைவச் சிறார் தத்தம் சூழலில் கல்விகற்க சைவாபிமானிகள் உதவ முன்வரவேண்டும் என்ற நாவலர் பெருமானின் அறைகூவலே இவரின் அடிமனதில் இருந்தது. தனது சூழலில் அங்குள்ள வசதி வாய்ப்புக்கள் அற்ற ஏழைச்சிறார்களும், எழுத்தறிவு பெறவேண்டும் - அதற்கு தான் ஒரு கல்விக் கூடம் நிறுவவேண்டும் என்று திடசங்கற்பம் செய்துகொண்டார்.

சில பெரியாருக்குத் தனது எண்ணக் கருத்தை வெளியிட்டார். இதன்பலனாக - 1813 ஆம் ஆண்டில் சிவன்கோவில் காணியில் கொட்டகை அமைத்து அங்குராப்பணம் செய்யப்பட்டது. இவரது உள்ளக்கிடக்கை இரண்டு எண்ணங்களைக் கொண்டது. ஒன்று வசதி வாய்ப்புக் குறைந்தவர்களுக்கு அரைக் கட்டணத்தோடு கல்வி, வீட்டில் தளபாட, விளக்கு வசதியற்றோருக்கு இராப்பள்ளி நடத்தல். இவ்விலட்சியங்களை உள்ளத்தில் கொண்டு அவரின் கல்விச் சேவை தொடர்ந்தது. இதன் பயனாக பாடசாலை இரண்டாக அமைந்தது. ஒன்று தமிழ் மற்றது ஆங்கிலம்.

தமிழ்ப் பாடசாலைக்குப் பெயர் விவேகானந்த வித்தியாலயம், ஆங்கிலப் பாடசாலையின் பெயர் வைத்தீஸ்வர வித்தியாலயம். எத்தனை கஷ்டங்கள் மத்தியிலும், சில பெற்றோரின் உதவி பெற்று ஆங்கிலப் பாடசாலையை நாகமுத்து பெரியார் நடத்தினார். தமிழ்ப் பாடசாலையை அவரின் தம்பியார் பொறுப்பேற்று நடத்தினார்.

### நன்கொடை

எனினும் வித்தியாலயத்தைத் தொடர்ந்தும் அரசு நன்கொடையின்றி நடத்துவது பெரியாருக்கு பெரும் இடர்பாடாகவே இருந்தது. ஆயினும் அவரது விடாமுயற்சி பலனளிக்கவே செய்தது. அப்போது யாழ்.நீதிவானாக இருந்த அக்பர் பெரியாரை நன்கறிவார். அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அரசு நன்கொடையைப் பெற்றுக்கொடுத்தார். பாடசாலையில் மாணவர் தொகை அதிகரித்தது. இத்தகைய பெரிய பள்ளியை நடத்துவது தனியொருவருக்கு கஷ்டமே. எனினும் பெரியார் தளரவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ண மிஷன் தொடர்பால், சுவாமி சர்வானந்தாவை யாழ். அழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதில் சுவாமி சர்வானந்தாவுக்கு பள்ளிநிலையை விளக்கினார். 1917 இல் விவேகானந்தா வித்தியாலயமும், வைத்தீஸ்வர வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டு இராமகிருஷ்ண மிஷனிடம் கையளிக்கப்பட்டது. சாதி மத பேதமற்ற சன்மார்க்க நெறியைப் பின்பற்றும் ஏழைப் பங்காளரான ஒரு அமைப்பிடம் தன் பள்ளிகளைக் கையளித்ததில் பெரு மகிழ்வும், நிம்மதியும் பெற்றார் பெரியவர்.

### மிஷன் பொறுப்பில்

வைத்தீஸ்வர வித்தியாலய வரலாற்றில் ராமகிருஷ்ண மிஷனின் நிர்வாக காலம் ஒரு பொற்காலமேயாகும். இந்தியாவிலிருந்து வந்து போகும் இராமகிருஷ்ண சுவாமிகளின் நற்போதனைகளும், சிந்தனைகளும் மாணவர்களை ஒழுக்கசீலர்களாக்கின. இது மட்டுமல்லாது யாழ்.நகரின் பிரபல பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படாத பாடப்பரப்புக்கள் இங்கு இருந்தன.

### பெரியார் மறைவு

தன்னலம் கருதாத சமூகத் தொண்டனாக, அன்றைய இக்கட்டான சூழலில் ஏழைக்கு எழுத்தறிவிக்க அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டு புண்ணியம் தேடிய புண்ணியர் இவ்வுலகை விட்டு 1932 ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தார். அவரது உடல் புகைந்தது. அவர் புகழுடல் நம்மத்தியில் ஒளிவீசி வருகிறது.

திருமதி கு.ஷண்முகடாஸ்
B.A.Dip,in.Ed (ஓய்வுபெற்ற ஆசிரியர், பழையமாணவி)
அதிபர், தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை

## அமெரிக்க கூட்டுப்படை தலைமைக் காரியாலயத்திற்குமுன்

# ஈராக்கில் நடந்த தற்கொலை தாக்குதலில் 20 பொதுமக்கள் பலி; 60 பேர்வரை காயம்



ஈராக்கில் அமைந்துள்ள - அமெரிக்கக் கூட்டுப் படையின் தலைமைக் காரியாலத்திற்கு வெளியே வெடிபொருட்கள் நிரம்பிய 'ட்ரக்' வாகனம் ஒன்றின்மூலம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் - சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் நின்ற, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் வேலையாட்கள் இருவர் உட்பட, 20 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிய ஆளும் சபையின் பேச்சாளர் 'கமிட் அல் கபாய்' உம்- 20 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 60 பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்ததுடன், கொல்லப்பட்டவர்களில் அமெரிக்கப் பிரஜைகளும் அடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற கட்டடத் தொகுதி முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மாளிகை எனவும், பின்னர் அந்த மாளிகை கூட்டுப் படையின் காரியாலயமாக மாற்றப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் 13 ஆம் திகதி சதாம் கைதுசெய்யப்பட்ட பின்னர், நடைபெற்ற பாரிய தாக்குதல் சம்பவம் இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே திக்ரிற்ரில் - வெடிபொருட்களை கார் ஒன்றில் எடுத்துச் சென்றபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சதாமின் உறவினர் எனவும் அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்தக் காரில் பயணம் செய்த மூன்றாவது நபர் உயிர்தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவொரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அல்ல எனவும், கூட்டுப் படையினரை தாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததினால் தம்மைத் தாமே அவர்கள் அழித்ததாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரி ரசல் தெரிவித்தார்.

# முஸ்லிம் மாணவிகள் முக்காடு அணியத் தடை பிரான்சில் மக்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம்!




பிரான்ஸில் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் முஸ்லிம் மாணவிகள் முக்காடு அணிவது அண்மையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

உலகில் பல நாடுகளில் இந்தத் தடைக்கெதிராக ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இவை தப்பான அபிப்பிராயங்களுக்கும், கலகங்களுக்கும் வழிவகுக்கலாமென பிரான்ஸின் உள்நாட்டமைச்சர் 'நிக்கோலஸ் சார்கோசி' தெரிவித்தார்.

பாரிஸில் 5000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

பிரான்சுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் பிரான்ஸ், மத்திய கிழக்கு நாடுகள், இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் போன்ற இடங்களிலும் நடத்தப்பட்டன.

இதனிடையே பிரான்ஸ் மதச் சார்பின்மையைக் கடைப்பிடித்துவருவதால், மதம் ஒன்றின் வெளிப்படையான சின்னங்களை அந்த நாட்டு ஜனாதிபதி 'ஜக்குவஸ் சிராக்' அண்மையில் அறிவித்திருந்தார்.

இவை மதம், மனித உரிமைக்கெதிரான தாக்குதல்கள் என அங்கு வாழும் முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், யூதர்களின் மதம் தொடர்பான தலைக்கவசம், சீக்கியர்களின் சில்க்கினாலான தலைக்கவசம் ஆகியன அடுத்த ஆண்டு முதல் தடைசெய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




இதனிடையே பிரான்ஸில் வாழும் சில முஸ்லிம் குழுக்கள் அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# லைபீரியாவின் கிழக்கு பகுதிக்கு ஐ.நா.அமைதிப்படை சென்றது!



லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலர் - சென்ற ஆண்டு நாட்டிலிருந்து வெளியேறிய பின், ஐக்கிய நாடுகளின் படையினர், தலைநகரின் முக்கிய பகுதிகளில் காவல் கடமைகளில் ஈடுபட்டுவந்தனர்.

ஆனால், கிராமங்களில் - சட்டம் ஒழுங்கற்ற நிலையில் காணப்படுகிறது. தற்போது லைபீரியாவின் கிழக்குப் பகுதியிலும் முதல் முறையாக ஐக்கிய நாடுகளின் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

லைபீரியாவின் கிழக்குப் பகுதியான 'ஸ்வேட்று' என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் 1000 எதியோப்பியப் படையினர் - ஐக்கிய நாடுகள் சபையினரால் சில நாட்களுக்கு முன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

எதியோப்பியப் படையினர் வருகையை மக்கள் ஆரவாரமாக வரவேற்றுள்ளதுடன், ஆயுதக் குழுக்கள் தம் ஆயுதங்களை ஒப்படைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளன.

தற்போது ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல நாட்டின் பகுதிகளிலும் சட்டம், ஒழுங்கற்ற நிலையில் காணப்படுகிறது.

அத்துடன், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளிடமிருந்து ஆயுதங்களை மீட்க வேண்டிய பணியையும், ஐக்கிய நாடுகள் சபை - லைபீரியாவில் நிறைவேற்றவேண்டியுள்ளது.

சென்றமாதம் போராளிகளிடமிருந்து ஆயுதக் களைவு ஆரம்பிக்கப்பட்டபோதிலும், போராளிகள் தமது துப்பாக்கிகளைக் கையளிப்பதற்குப் பணம் கொடுக்கப்படவேண்டும் எனக் கேட்டுவருகின்றனர்.

ஆயுதங்கள் முற்றாக போராளிகளிடமிருந்து திரும்பப் பெறப்படும்வரை மோதல்கள் தொடரலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செங்கடலில் வீழ்ந்த விமானத்தின் இரண்டாவது கறுப்பு பெட்டியும் மீட்பு!

செங்கடலில் இம்மாதம் 3 ஆம் திகதி வீழ்ந்து நொருங்கிய எகிப்திய விமானத்தின், இரண்டாவது கறுப்புப் பெட்டியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் பணியை மேற்கொண்டிருந்த பிரான்ஸ் குழு, 3000 அடிகளுக் குக் கீழ் இரண்டாவது கறுப்புப் பெட்டியைக் கண்டெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னர் கண்டெடுக்கப்பட்ட முதலாவது கறுப்புப் பெட்டியில் - விமானத்தின் அசைவுகள் பதியப்பட்டிருந்தன. இரண்டாவது கறுப்புப் பெட்டியில் - விமானிக்கும், நிலத்தில் உள்ள கட்டுப்பாட்டுக் கோபுரத்திற்கும் இடையிலான தகவல்கள் பதியப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புப் பெட்டிகள் 6000 அடி ஆழமான நீரினுள் ஒரு மாதம்வரை பழுதடையாமல் இருக்கக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உலக நோக்கு

## மீண்டும் சேவையில் ஈடுபடும் ரஷ்ய குண்டுவீச்சு விமானம்!



ரஷ்யாவின் ரியூ 160 எனப்படும் நீண்ட தூரம் பிரயாணம் செய்யும் ஆற்றல் கொண்ட குண்டுவீச்சு விமானங்கள் மீண்டும் சேவையில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

வெள்ளிக்கிழமை ரஷ்யாவின் ஏஞ்சல் விமானத் தளத்திலிருந்து உலகின் மிகப் பெரிய குண்டு வீச்சு விமானங்கள் புறப்பட்டுச் சென்றமை ரஷ்யாவின் அலை வரிசை ஒன்றில் காண்பிக்கப்பட்டது.

ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய இப் போர்விமானம், உலகப்போரின்போது நீண்ட தூரத்தில் அமைந்துள்ள எதிரியின் நிலைகளை, அணு ஆயுதங்களையும், சாதாரண ஆயுதங்களையும் கொண்டு தாக்குவதற்கென வடிவமைக்கப்பட்டிருந்தது. இவ்வகையான விமானங்களை ரஷ்யா உலகின் எந்த நாடுகளுக்கும் விற்பனை செய்யவில்லை.

1999 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சோவியத் ரஷ்யாவிலிருந்து உக்ரெய்ன் பிரிந்தபோது, தம்மிடம் இருந்த முழு ரியூ 160 விமானங்களையும் ரஷ்யாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனுக்காக கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊர் சுற்றி எழுதுவது

வீதிகளில் பல இடங்களிலும் சைக்கிள்கள் வரிசைக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கிழமை நாட்களில் காலையிலும், மாலையிலும் இந்தக் காட்சியைக் காணலாம். சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் இப்படிக்காட்சிதரும் இடங்களில் நிறைய சைக்கிள் வண்டிகளைக் காணமுடியும்.

இந்தக் காட்சி இப்போது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பரவி இந்த இடங்களிலும் விஸ்தரித்து வருகின்றது.

இதன் தொடக்கம் யாழ்ப்பாணத்தில்தான் முதலில் முளைவிட்டது. பின்னர் படிப்படியாக குடாநாட்டில் பரவியது. இடப்பெயர்வுடன் மற்றும் பல பகுதிகளுக்கும் பரவியது.

காலையில் தனியார் கல்வி நிலையத்துக்கு படிக்கச் செல்லும் ஒரு மாணவர் வீடு திரும்பி உணவு உண்ணக்கூட நேரமில்லாமலே பட்டினி கிடக்கின்றனர். வேறு சிலர் சிற்றுண்டியைக் கடித்துச் சமாளிக்கின்றனர்.

ஒருபாடம் ஒரு ஆசிரியரிடம் படித்தபின் மற்றொரு பாடத்தைப் படிப்பதற்காக நிற்க நேரமில்லாமல் வேறொரு ஆசிரியரிடம் ஓடுகின்றனர். இப்படி நாள் முழுக்கச் சென்று படிக்கின்றனர்.

பாடசாலையில் படிப்பதுடன், தனியார் கல்வி நிலையங்களிலும் இவர்கள் ஓடியோடிப்படிக்கின்றனர். இவற்றை மீட்பதற்கு வீட்டிலும் படிக்க வேண்டும். இதற்கு இவர்களுக்கு எங்கே நேரமிருக்கிறது?

தனியார் கல்விக்கூடத்துக்குப் படிக்கச் சென்ற பிள்ளைகள் - பெண் பிள்ளைகளானாலும், ஆண் பிள்ளைகளானாலும் அவர்கள் சுகமாகத் திரும்பிவந்து சேர வேண்டுமேயென்று வீட்டில் பெற்றோரும், பாதுகாவலரும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஏக்கத்துடன் காத்திருப்பதையும் பல இடங்களிலும் காணலாம்.

பல வருடங்களுக்கு முன்னர் - பள்ளிக்கூடங்களிலேயே சில பாடங்களில் படிப்பு ஏறாத பிள்ளைகளை அந்தப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது வீட்டுக்கு ஓய்வு நேரத்தில் வரச சொல்லிப் பாடம் சொல்லிக்கொடுப்பர். இல்லையேல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பள்ளிக் கூடத்திலேயே விசேட வகுப்பு நடத்தித் தமது ஓய்வு நேரத்தை ஆசிரியர்கள் அந்தப் பிள்ளைகளுக்காகச் செலவு செய்வர்.

இப்பொழுது தனியார் பாடசாலை என்று ஓடியோடித்திரியும் பிள்ளைகளின் பழக்க வழக்கம் பற்றியும் பெற்றோரும், ஆசிரியர்களும் மற்றும் கல்லூரி ஆசிரியர்களும் கூடக் கவலை கொள்கின்றனர்.

இதற்கு ஒரு மாற்றுயோசனையை பிரபல எழுத்தாளரும், கல்விமானுமான சிற்பி நேற்று நடந்த யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது தெரிவித்தார்.

கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரி ஆசிரியர்களையும் வெளியேயுள்ள திறமைவாய்ந்த ஆசிரியர்களையும் பெற்று, ஓய்வுநேர வகுப்புக்களை பழைய மாணவர் சங்கமே நடத்தலாமென்று சிற்பி ஐயா இந்த யோசனையைத் தெரிவித்தார்.

இவ்விதம் செய்வதன் மூலம் பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடியோடித்திரிவதையும், பெற்றோர் அவர்களைப் பற்றிக்கவலைப் படுவதையும் தவிர்க்கலாமென்று சிற்பி நினைத்தாரோ?

அவர் சிற்பி அல்லவா? அவர் கல்வியை நல்ல முறையில் செதுக்க நினைக்கிறார். அதன்மூலம் நல்ல சமுதாயத்தையும் செருக்கக் கனவு காண்கிறார் போலும்!

எந்த வேலையையும், பொறுப்பையும் பத்திரிகையாளரிடம் நம்பி ஒப்படைக்கலாம். அது எந்த வேலையாக இருந்தாலும் அவர் சிறப்பாகச் செய்து முடிப்பார் என்று பழம் பெரும் பத்திரிகையாசிரியர் கே.பி.ஹரன் சொல்லுவார்.

வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொன்விழாவையொட்டி ஒரு 'மலர்' வெளிவந்திருந்திருக்கிறது.

இந்த மலரின் ஆசிரியராக திருமதி.குணமணி சண்முகதாஸ் சிறப்பாகப் பணியாற்றி அருமையான மலரைப் படைத்திருக்கிறார். இவர் முன்பு 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் பின்னர் ஈழநாடு வாரமலர் ஆசிரியராகவும் பணியாற்றித் தான் கல்வி கற்ற வைத்தீஸ்வராவிலேயே ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

ஹரன் ஐயாவின் வார்த்தைகளில் சபாஷ், பலே, பலே என்று குணமணியைப் பாராட்டலாம்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுகாதாரசேவை ஊழியர்கள்: இன்றுமுதல் உண்ணாவிரதம்!

## இணக்கம் ஏற்படாவிட்டால் தொடரும்

(கொழும்பு)

இன்று முதல்உண்ணாவிரதப் போராட்டத்தை தாம் முன்னெடுக்கப் போவதாக சுகாதார சேவை ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார அமைச்சருடன் நாளை இடம்பெறவுள்ள கலந்துரையாடல்களிலும் தமது வேதனம் தொடர்பில் தீர்வுகள் முன்வைக்கப்படாவிடின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக இது மாற்றம் செய்யப்படுமெனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப்போராட்டத்திற்கு 53 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் தோல்வியடையும் பட்சத்தில் தாம் நாடளாவிய ரீதியிலான போராட்டத்தை இந்த மாதம் 26 ஆம் திகதியிலிருந்து ஈடுபடவுள்ளதாகவும் சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர்.(01)

### கூட்டணி...

கையை ஏற்படுத்துவது தொடர்பாக நாம் இன்னும் தீர்மானிக்கவில்லையென சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவும் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கான எந்த அழைப்பை விடவுமில்லை.

எங்களுக்குத் தெரிந்தது மாகாண சபைத் தேர்தல் முதலில் நடப்பது தான். எனவே அதற்காகவே நாம் இப்போது தயாராகி வருகிறோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வை ஏற்படுத்தினால் நாடாளுமன்றைக் கலைக்க வேண்டிய தேவை இல்லையென ஜனாதிபதி என்னிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தற்போதைய நெருக்கடி தீர்வதற்கு பொதுத்தேர்தல் சாத்தியமாகமாட்டாதெனவும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை - அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணைவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். சுதந்திரக் கட்சி மட்டும் ஜே.வி.பியுடன் இணைவது மட்டுமல்ல மற்றைய கட்சிகளும் இணைந்து தற்போதைய தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டுமெனவும் மேலும் தெரிவித்தார்.

### விடுதலை...

தீர்வு என்பன உள்ளடங்கியதாகவும் -

புதிதாக அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பானது நாட்டின் சகல மக்களது அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக உள்ளடக்கப்படுதல் வேண்டும் எனவும், சகல சமுகங்களதும் நலன்களும் பேணப்படுவதுடன் சில குழுக்களின் பாதுகாப்பும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### இந்தியாவுடனான...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ராணுவத் தளபதி ஆகியோர் இந்தியாவுக்குச சென்றிருந்தவேளை இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். (01)

## அதிரடிப்படையை பலப்படுத்த....

அதிபர் இந்திரா டி சில்வா குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் - தற்போது நாட்டில் யுத்தமற்ற சூழல் நிலவுகின்ற போதும், அதிரடிப்படையினர் உள் நாட்டுப் பாதுகாப்பில் முக்கிய அங்கமாக இருந்து வருகின்றனர்.

விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும், மிகவும் நெருக்கடியான வேளையில் செயற்படத்தக்க வகையிலான உயர்ந்த பட்ச பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

அடுத்த கட்டமாக விசேட அதிரடிப்படையிலுள்ள ஒவ்வொரு அதிகாரியும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே,

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் விசேட அதிரடிப்படையினர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நாட்டுக்காக உயிரைக் கொடுத்துப் பணியாற்றியுள்ளனர்.

இதுவரை 408 விசேட அதிரடிப் படையினர் சண்டைகளில் உயிரிழந்தும், 632 பேர் வரையில் காயமடைந்தும் உள்ளனர்.

எதிர்காலத்தில் விசேட அதிரடிப் படையைப் பலப்படுத்த மேலும் புதிய படைப்பிரிவுகள் அமைக்கப்படும்.

பரசூட் பிரிவு, சிறிய கூட்டு தாக்குதல் அணிகள் மற்றும் மலைநாட்டில் செயற்படத்தக்க தனியான படைப்பிரிவு என்பன விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாற்சந்தி



கனகண்ணைக்கு விசயம் தெரியுமோ...

கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்காக ஆறு மோப்ப நாய்களைஅமரிக்கா வழங்கப் போகுதாம்...

ஓமோம் கேள்விப்பட்டன்... அந்த ஆறு நாய்களின் பெறுமதி என்ன தெரியுமே ஒரு இலட்சத்து இருபதாயிரம் அமரிக்க டொலர்களாமெல்லே. கண்ணி வெடிகளை புதைக்க முந்தி ராணுவத்துக்கு பயிற்சி கொடுத்தவையும் கண்ணி வெடிகளை இலட்சக்கணக்கில் அரசுக்கு கொடுத்தவையும் ஒரு காலத்தில் கண்ணி வெடிகளைப் புதைத்தவையும்... இப்ப கண்ணி வெடிகளை அகற்ற உதவ வருகினமாம்... நாய்களையும் அனுப்பப் போகினமாம்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு உதவ முன் வருகிற நடுகளில் சில வழங்கிய கண்ணிவெடிகளால் எங்கட சனம் எத்தனை பேர் தங்களை இழந்த ஊனமுற்றவர்களாயுள்ளார்கள்...இது எந்த மனித நேயத்தில்

அடிப்படையில் வழங்கப்பட்டதாம்...?

இங்கால கண்ணிவெடி அகற்றுகிறோம் என்று மனிதநேயம் பேசுகிற நாடுகள் இன்னமும் ராணுவத்துக்கு, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களையும், போர்க்கலங்களையும் வழங்கி

பயிற்சிகளையும் வழங்கிக்கொண்டுதான் இருக்கினம்... உண்மையில் மனிதநேயம் இருந்தால் இலங்கை இராணுவத்திற்கு ஆயுதங்களையும் கண்ணிவெடிகளையும் விற்காமல் இருந்தால்

போதும், பேயும் தேவையில்லை நாயும் தேவையில்லை.

தெருவாசி

## அமெரிக்க அதிகாரிகள் எவரும்...

காங்கிரஸின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்திலோ அல்லது வேறு ஏதாவது இடத்தி லோ சந்திக்கவில்லை.

சர்வதேச பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளை அமெரிக்க அரசாங்கம் சேர்த்துள்ளது. இந்தக் காரணத்தாலேயே காங்கிரஸ் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் சாமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் அமெரிக்காவில் அவர்களது தடை தொடர்பாகவே கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் அமெரிக்க தூதரகத்தில் அவரைசந்திக்க முடியாமைக்கு புலிகள் மீது அந்த நாடு விதித்திருக்கும் தடையே காரணமெனவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலை...

கள் அனைவரும் பொது எதிரியைத் தோற்கடிக்க நாம் அழைப்பு விடுக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - நாளை காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜே.வி.பி - சுதந்திரக் கட்சிகளுக்கிடையேயான கூட்டணி அமைக்கப்படும் எனவும், இதில் சுதந்திரக்கட்சி சார்பில் அதன் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பி சார்பில் அதன் பொதுச்செயலர் ரில்வின் சில்வாவும் கையெழுத்திடவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்கள்

### திரு. கந்தையா வரதலிங்கம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா வரதலிங்கம் நேற்றுக் (18.01.2004) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் இராசலட்சுமி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, சரோஜினிதேவி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும் கா.செ.பத்மநாதன், ஸ்ரீரஞ்சனி, குமாரலிங்கம், வசந்தகுமாரி, ஆகியோரின் மாமனாரும், சுரேசன், சுரேந்திரன், சுதாகரன், சுதாஜினி, சுபாஜினி, சசிலா, மாலிகா, சோபிதன், ஜீவதன், தர்மினி, நிவேதன், கமலாம்பாள், தயாளினி, புஸ்பலதா, சிவதாஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் ரஜனி, கஜனி, வர்சிகா, யாதவன், ரம்மியன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் அமரர்கள் சின்னத்தம்பி, தங்கம்மா அவர்களின் அன்பு மருமகனும், சின்னராசா, நாகரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (19.01.2004 - திங்கள்) பிற்பகல் 3.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கவிஞர் புதுவை இரத்தினதுரை
(மகன்)
கா.செ.பத்மநாதன ஜே.பி.
(மருமகன்)

*சாவகச்சேரி வீதி,*
*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

(சி.2162)

### சிவசம்பு சிவராசா

கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மாலிகாவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவராசா நேற்று (18.01. 2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரேசு தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோரஞ்சினியின் அன்புக்கணவரும், சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரனும், நகுலேஸ்வரி சிவனேஸ்வரி, வேலருள்ச் செல்வன், தவக்குமார், இராசகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் முருகானந்தன், கிருபானந்தன், கஜமுகன், கஜரூபன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சங்கானையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கஜரூபன்
பா.கிருபானந்தன்
(பெறாமக்கள்)

*மாலிகாவத்தை,*
*சங்கானை.*

(சி.2160)


ITP JAFFNA SRI LANKA

INFORMATION TECHNOLOGY PARK

Ministry of Rehabilitation, Resettlement & Refugees,
National Housing Secretariat Building,
Near Kachcheri, Kandy Road, Jaffna, Sri Lanka.

Phone:021-2223641, Director- 2223643
E-Mail:itp@sltnet.lk

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் 2004ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் 20-01-2004 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எமது வளர்ச்சியில் மற்றொரு பரிணாமம்
மிகவிரைவில் -
வடமராட்சி,தென்மராட்சி,
வலிகாமம்,மற்றும் தீவகத்திலும்
புதிய கிளைகள் ஆரம்பம்.

Diploma Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Diploma in MS-Office | 5 | 2800 |
| Diploma in Hardware Technology | 6 | 3200 |
| Diploma in Desktop Publishing | 5 | 2400 |
| Diploma in Computer Programming | 6 | 5500 |
| Diploma in Internet Technology | 5 | 4500 |

Certificate Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Ms-Word | 30 Hours | 1000 |
| Ms-Excel | 30 Hours | 1000 |
| Ms-Access | 30 Hours | 1000 |
| Pagemaker | 30 Hours | 1000 |
| CorelDraw | 30 Hours | 1000 |
| AutoCAD | 30 Hours | 1000 |
| C/C++ | 40 Hours | 1800 |
| Visual Basic | 40 Hours | 1800 |
| Java | 40 Hours | 1800 |
| Internet & E-Mail | 40 Hours | 1800 |
| Hardware | 40 Hours | 1800 |
| Oracle | 40 Hours | 1800 |
| Webpage Design | 40 Hours | 1800 |
| HTML & J scripts | 40 Hours | 1800 |

Registration Fees for all the Courses is Rs.250/-only.

On-line Course
Diploma in PC App. & Office Management
Duration - 3 Months , Course fee - 2750/-

விண்ணப்ப முடிவுத் திகதி 31-01-2004

வகுப்புக்கள் ஆரம்பம்
வார இறுதி- 01-02-04
வார நாள் - 02-02-04

Information: Director
Centre for Information Technology
For Further Details: Course Manager


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.